# குழந்தைப்பராய அனுபவங்கள் மற்றும் வன்செயல்கள் மீதான அவற்றின் தாக்கம் உள்ளிட்ட குழந்தை பாதுகாப்பு

## கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டற் சுருக்கம்

ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF)
நீதி அமைச்சு
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
தேசிய கல்வி நிறுவகம்
கொழும்புப் பல்கலைக்கழகம்
குழந்தைநல மருத்துவர்களின் கல்லூரி
சேவ் த சில்ரன்
சிறந்த நடைமுறைகள் குழு

என்பனவற்றின் ஓர் கூட்டுழைப்பு முயற்சி

ஒருங்கிணைப்பு: கலாநிதி ஹிரந்தி விஜேமானே

## முகவுரை

“பால்நிலை விரிவாக்கல்: ஏன் ஆண்மை விடயம்” என்ற அறிக்கை - இலங்கையின் நான்கு மாவட்டங்களில் மனப்பான்மை, செயற்பாடுகள் மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பான ஓர் ஆய்வு - இலங்கை கெயார் இன்டர்நாஷலினால் அதன், பால்நிலை சமத்துவத்தை மீள்வரையறை செய்தல் மற்றும் ஆண்களை ஈடுபடுத்த உரிமையளித்தல் - என்ற ஆண்களை ஈடுபடுத்தல் கருத்திட்டத்தின் கீழ் 2013 ஏப்பிரலில் வெளியிடப்பட்டது. கொழும்பு, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் பால்நிலை மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறை தொடர்பாக ஆண்களின் அறிவு, நடைமுறைகள், மற்றும் சமூக மனப்பான்மைகளைப் புரிந்துகொள்வதனைத் தடுப்பதற்கு பங்காளிகளின் கூட்டுழைப்புடன் அறிக்கை தயாரிக்கப்பட்டது. ஆய்வு கெயார் நிகழ்ச்சிகளுக்கான ஒப்புநோக்குக் காட்டிகளை வழங்குவதுடன் பாலினப்பட்ட மனப்பான்மை, ஒழுக்கநெறிகள், மற்றும் பால்நிலை சார்ந்த வன்முறைகளைத் தடுப்பதில் பிரயோகிக்கக்கூடிய பெண்கள் மற்றும் ஆண்களின் செயற்பாடுகள், ஆரோக்கியம், இளைஞர் மற்றும் உரிமையளித்தற் தலையீடுகள் என்பன தொடர்பில் தகவற் செல்வத்தையும் வழங்குகின்றது. இந்த ஆய்வு உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆராய்ச்சிக்கான நெறிமுறை வழிகாட்டிகளைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்டது. இந்த ஆய்வு உபகரணங்கள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பெண்களின் ஆரோக்கியம் மற்றும் குடும்ப வன்முறை தொடர்பான பன்நாட்டு ஆய்வு மற்றும் இன்ஸ்ரிரியூடோ புறோமன்டோ மற்றும் பெண்கள் தொடர்பான ஆய்வுகளுக்கான சர்வதேச நிலையம் ஆகியவற்றினால் நடாத்தப்பட்ட சர்வதேச ஆண்கள் மற்றும் பால்நிலை சமத்துவ ஆய்வு என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன.

கொள்கை மற்றும் திட்டமிடல் மேம்பாடுகளை அறிவிப்பதற்குத் தரவுகளைப் பயன்படுத்தும் ஒரு ஊடகமாக, பின்வரும் பரப்புகளில் பரிந்துரைகளைத் தயாரிப்பதற்கு அரச, சுகாதார, மற்றும் அரச சார்பற்ற துறைகளிலிருந்து உறுப்பினர்களை உள்ளடக்கிய ஐந்து கருப்பொருள்சார் பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டன:

- கலாநிதி ஹிரந்தி விஜேமான அவர்களினால் ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் (UNICEF) கூட்டுழைப்புடன் ஒழுங்குசெய்யப்பட்ட குழந்தைப்பராய அனுபவங்கள் மற்றும் வன்முறைக் குற்றச்செயல்கள் மீதான அவற்றின் தாக்கம் உள்ளிட்ட - குழந்தைப் பாதுகாப்பு
- கலாநிதி நாலிக்க குணவர்த்தனவினால் ஒழுங்குசெய்யப்பட்ட - பெண்களின் மனப்பான்மை மற்றும் அவர்களின் உள மற்றும் உடல் ஆரோக்கியம் மீதான பால்நிலை சார்ந்த வன்முறைகளின் தாக்கங்களை ஆராய்தல்
- பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க அவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட – பால்நிலை சார்ந்த வன்முறைகளைக் குறைப்பதில் தனியார்த் துறையின் ஈடுபாடும் அவர்களினால் ஆற்றப்படக்கூடிய பங்குபணியும்
- பிரபு தீபன் அவர்களால் இலங்கை குடும்ப திட்டமிடல் சங்கத்தின் கூட்டுழைப்புடன் ஒழுங்குசெய்யப்பட்ட – சமூக பால்நிலை சார்ந்த வன்முறைகளினைக் குறைப்பதற்கு இளைஞர்களை ஈடுபடுத்தல்
- கலாநிதி டயானாத் ரணதுங்க அவர்களால் உலக சுகாதார தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் எயிட்ஸ் (UNAIDS) ஆகியவற்றின் கூட்டுழைப்புடன் ஒழுங்குசெய்யப்பட்டபாலினம் சார்ந்த வன்முறைகளினைத் தடுப்பதில் இளைஞர்களை ஈடுபடுத்தல் ஓர் முதன்மை வழிவகையாகக் கருத்தில்கொள்ளல்

இந்த ஆய்வுக் கட்டுரைகள் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு நான்கு மாவட்டங்களில் ஒவ்வொரு துறையிலும் பணிபுரியும் உள்ளூர் அரச நிறுவனங்கள் மற்றும் குடிசார் சமூகங்களுடன் அவர்களின் பணிகளை அறிவிக்க உதவும்பொருட்டு பகிரப்படும்.


## ஏற்பறிவிப்புகள்

இலங்கை கெயார் இன்டர்நாஷனல் நன்றியுடன் ஒருங்கிணைப்பாளர்கள், கலாநிதி ஹிரந்தி விஜேமான்னே,கலாநிதி நாலிக்க குணவர்த்தன, போசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க, பிரபு தீபன், மற்றும் கலாநிதி டயனாத் ரணதுங்க, மற்றும் ஒவ்வொரு பணிக்குழுக்களிலும் பணியாற்றிய உறுப்பினர்களுக்கும் இந்தக் கொள்கைச் சுருக்கங்களைத் தயாரிப்பதற்கும் பூரணப்படுத்துவதற்கும் வழங்கிய பங்களிப்பு மற்றும் அர்பணிப்பிற்கு அதன் ஏற்பறிவிற்பினைத் தெரிவிக்கின்றது. சகல ஐந்து கருப்பொருள் பணிக்குழுக்களையும் ஒருங்கிணைப்பதில் அவரின் அர்பணிப்பு மற்றும் கடின உழைப்பிற்காக சாமா இராஜகருணா அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தடுப்பிற்கான பங்காளிகளாகிய அரச நோர்வேத் தூதரகம், இலங்கை ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் (UNDP), ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், இலங்கை குடும்பக் கட்டுப்பாட்டுச் சங்கம், உலக சுகாதார தாபனம் மற்றும் ஐக்கிய நாடுகள் எயிட்ஸ் ஆகியவற்றிற்கு, ஆய்வு மற்றும் ஆய்வுக்கட்டுரைத் தயாரிப்பு, செயற்படுத்தல் மற்றும் பரவச் செய்வதில் அவற்றின் ஒத்துழைப்பிற்குகெயார் இன்டர்நாஷனல் நன்றியைத் தெரிவிக்கின்றது.

மேலும் இந்நூலினை தமிழ் மொழியில் மொழிப்பெயர்ப்பினை மேற்கொண்ட திரு. **R.** லோகேந்திரா அவர்களுக்கும், மொழிப்பெயர்ப்பு மற்றும் அமைப்பினை மீள சரிப்பார்த்த திவ்யா இராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

# உள்ளடக்கம்

அறிமுகமும் பின்னணியும் ........ 03

பிரதான முடிவுகளின் சுருக்கம் ........ 06

நடப்பிலுள்ள கொள்கைகளும்
நிகழ்ச்சித்திட்டங்களும் ........ 09

பரிந்துரைசெய்யப்பட்ட தலையீடுகள் மற்றும்
மூலோபாயங்கள் ........ 10

இணைப்பு அ
பரிந்துரைக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம் ........ 17

## அறிமுகமும் பின்னணியும்

"பால்நிலையை விரிவாக்கல்: ஏன் ஆண்மை விடயம்'என்ற கெயார் ஆய்வு,சிறுவர் துஷ்பிரயோகம், குடும்ப வன்செயல் மற்றும் நெருங்கிய துணை மீதான வன்செயல் என்பனவற்றிற்கிடையே ஓர் இணைவினை இனங்கண்டிருக்கின்றது. இந்தத் காரணி இது வரையிலும் ஒரு முக்கிய பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. அதற்கு மேலதிகமாக, இந்த ஆய்வு, பெரும்பாலும் கவனிக்கப்படாதும் சிறுமியர் தொடர்பில் காட்டப்படும் அதே அவதானம் செலுத்தப்படாதுமான, வேறு வடிவிலான சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பைக் கூட வெளிப்படுத்தியிருக்கின்றது. இந்த ஆய்வு நேரடியானதொரு தற்காலிக உறவைச் சுட்டிக் காட்டாது இருந்தபோதிலும், இந்த இணைவு முக்கியத்துவம் தரப்பட வேண்டியளவு குறிப்பிடத்தக்கதாக இருப்பதுடன் முன்னுரிமைக் கரிசனையுடன் அவதானிக்கப்பட வேண்டியிருக்கின்றது. பாலியல் வன்முறைகளில் இருந்து பாதுகாப்பளிப்பதற்கு சிறுவர் உரிமைகள் மீறப்படுதல் அவர்களில் சிலருக்கு வளர்ந்தோராக அவர்களின் நடத்தையில் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என அது முன்வைக்கிறது. ஆய்வு முடிவுகளுக்கு இணங்க, சில சந்தர்ப்பங்களில், சிறுவர்கள் வளர்ந்தோராகும் போது பால்நிலை சார்ந்த வன்செயல் நடத்தையுடன் இது தொடர்புபடுத்தப்படலாம். சிறுமியர்களின் துஷ்பிரயோகத்திற்கு மேலதிகமாக, சிறுவர்கள் துஷ்பிரயோகம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஓர் முக்கிய பிரச்சினையாக இருப்பதுடன், முந்தையது அதிகம் பகிரங்கப்படுத்தப்பட்டு அறிக்கையிடப்படுகின்றது. சிறுவர்கள் மற்றும் சிறுமியர் இரு பாலாரும் ஓர் பதில்வினைத் திட்டமிடுதலில் முக்கியமாக உள்ளதுடன், அது ஓர் திடமான மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாய் உள்ளதுடன் பல இயற்கையில் நுண்ணுணர்வாயுள்ளன தொடர்பான பிரச்சினைகள் கவனிக்கப்பட வேண்டியிருக்கின்றது.

இந்தப் பிரச்சினை தொடர்பில் இலங்கையின் பட்டறிவு, வேறு நாடுகளினதை விட மாறுபட்டதானதாக இல்லை. பால்நிலை சார்ந்த வன்செயலின் சம்பவம் மற்றும் இருப்பு நீண்டகாலமாக இருந்திருக்கின்ற சாத்தியம் உள்ள போதிலும் 1980 களின் நடுப்பகுதியிலேயே பிரதானமாக புலப்பட ஆரம்பித்து, அது பற்றி இன்னும் அதிகம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், தொடர்ந்து அதிகளவு முன்னுரிமை வழங்கப்பட்டு வருகின்றது. ஆண் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகம் முதன் முதலாக இலங்கையில் 1990 களிலேயே முக்கியத்துவம் பெற்றது. இது குறிப்பாக குழந்தைப் பாலியல் சுற்றுலாவுடன் தொடர்புபட்ட சிறுவர்களின் வணிக பாலியல் சுரண்டலுடன் தொடர்புடையதாக இருந்தது. இந்த ஆய்வின் சூழமைவில், இந்தக் குறித்த பிரச்சினை வெளிப்படையானதாக இருக்கவில்லை, ஏனெனில் பெரும்பாலும் ஆய்வுக்குட்பட்ட புவியியல் அமைவிடங்கள் சுற்றுலாப் பயணிகள் உயர்வாகவுள்ள கரையோரப் பிரதேசங்களை உள்ளடக்கி இருக்கவில்லை.

இலங்கை சமுதாயத்தில் பாலியல் துஷ்பிரயோகத்தினை மறைத்து வைக்கும் செல்நெறி காணப்படுகின்றது. இது மீட்புச் சேவைகளை அணுகுவதற்கு ஓர் தடையாக இருப்பது மட்டுமல்லாது குற்றச்செயலுக்குப் பொறுபானவர்களைக் கைதுசெய்தல், அவர்களை குற்றத்தை ஒப்புக்கொள்ளச் செய்தல், மற்றும் அவர்களுக்கு வேறு அப்பாவி குழந்தைப் பலியாட்கள் இரையாவதைத் தடுப்பதற்கும் தடையாக இருக்கின்றது.

பல்வேறு காரணங்களுக்காக, சிறுவர்களின் பாலியற் துஷ்பிரயோகம் சிறுமிகளுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்தளவிலேயே புலப்படுகின்றது. இது மிகவும் குறைந்த அளவிலேயே சட்ட அமுலாக்க அதிகாரசபைகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு சேவைகளுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கின்றது. இதற்கு ஒரு காரணம், பெண் பிள்ளைகளைப் பொறுத்தவரையில், கர்ப்பந் தரிக்கும் இடர் மற்றும் குடும்பங்களின் நலனுடன் சம்பந்தப்பட்ட, கன்னித்தன்மையை இழக்கும் சாத்தியம் இருத்தல் என்பன ஆகும். சிறுமியர் மற்றும் பெண்கள் மீதான பாலியல் வன்செயல் சம்பவங்கள் ஊடகங்களில் உடனடியாக எதிர்வினையாக பிரதிபலிக்கின்றன. ஆனால் ஆண் சிறுவர்கள் மீதான பாலியற் துஷ்பிரயோகம் நிகழும்போது, இரண்டும் சமமான கவனத்தை ஈர்க்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு நிகழ்வதில்லை.

பாலியற் துஷ்பிரயோகம் குழந்தைப் பலியாட்களின் குழந்தைப்பராயத்தின் பண்புத்தரத்தினைப் பாதிப்பது மட்டுமல்லாது, கெயார் ஆய்வில் காணப்பட்டவாறு, அவர்கள் வயதுவந்தோராக முதிர்ச்சியடையும் போது ஓர் நீண்டகால தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் குடும்ப வன்செயல் சில வேளைகளில் ஒரே குடும்பத்திலேயே இடம்பெறுகின்றது என ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அவ்வாறான குழந்தைப் பலியாட்கள் வயது வந்தோராக முதிர்ச்சியடையும் போது மூன்றில் ஒருவர் குடும்ப வன்செயல் குற்றம்புரிவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

குடும்ப வன்செயல் வீட்டில் இரகசியமாக இடம்பெறுவதனால் பிறப்பிலிருந்து குழந்தையின் வாழ்க்கை வட்டத்தில், மழலைப் பருவம் முதல் ஆரம்ப குழந்தைப் பருவம் மற்றும் கட்டிளமைப் பருவம் வரை தொடர முடியும். குழந்தையொன்றின் வாழ்க்கை வட்டத்தின் சகல கட்டங்களிலும், அதன் ஒவ்வொரு கட்டமும், மனவெழுச்சியில் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான வயதுவந்தோராக முதிர்வதில் முக்கியமானதாக இருப்பதனால், அது பாதிப்பை ஏற்படுத்தலாம் என வலியுறுத்தப்படுவது முக்கியமானதாக இருக்கின்றது. குழந்தைப்பராயத்தில் வன்முறையை நேரில் பார்க்கும் குழந்தைகள் வன்செயல் நடத்தைப் பாங்கினை எளிதில் பின்பற்ற முடிவதும், மட்டுமீறிய துஷ்பிரயோக இடரிலிருப்பதும், விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடும் கும்பல்களில் இணையும் போக்கும், மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுவதும் அறியப்பட்டிருக்கின்றன.

குடும்ப வன்செயல் மற்றும் குழந்தைப்பராய மனவதிர்ச்சியின் இரட்டை நிலவுகையின் கடுமையான மற்றும் பாரதூரமான நீண்டகாலப் பின்விளைவுகள் இருப்பது குறிப்பிடப்பட வேண்டியது. இவை கடுமையான துஷ்பிரயோகம், உடல்சார் மற்றும் மனவெழுச்சி ஊறு காரணமாக குழந்தையொன்று மரணித்தல் போன்ற துயரமான பின்விளைவு இன்னல்களை உள்ளடக்குகின்றன. குடும்ப வன்முறை காரணமாக தாய் ஒருவரின் மரணம் அவர் விட்டுச்செல்லும் பிள்ளைகளுக்குக் கூடபெற்றோரின் அரவணைப்பு பறிக்கப்படுவதனால் பிரைச்சனைகளை ஏற்படுத்தலாம். இது அவர்களின் தந்தையினால் குற்றம் புரியப்பட்டிருக்கும் பட்சத்தில் அவர் நீதிமன்றத் தீர்ப்பிற்குரிய விளைவுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் போது நிலைமையை மேலும் மோசமாக்கும்.

குழந்தைப்பராயத்தில் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகம் துணிச்சலான நடத்தை, பாடசாலைகளில் குறைவான அடைவு, கோபம், வெட்கம் மற்றும் குற்ற உணர்வுகளுடன் தொடர்புபட்டதாக உலகின் வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் வெளிப்படுத்தி இருக்கின்றன. அந்த இயற்பண்புகள் குழந்தைப்பராயத்துடன் தொடர்புபட்ட சுய தண்டனையளிக்கப்பட்ட வன்செயல் அல்லது ஏனையோர் மீதான வன்முறைக் குற்றம்புரியும் காரணிகளாவதற்கான உள்ளாற்றலைக் கொண்டிருக்கின்றன.

குழந்தைப்பராயத்தில் துஷ்பிரயோகம் மற்றும் உதாசீனப்படுத்தப்பட்ட அனுபவங்கள் நீண்ட காலத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதுடன் குழந்தைகள் மீது அவர்களின் குழந்தைப்பராயம் மற்றும் வயதுவந்த காலப்பகுதியில் தீங்கான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அத்தகைய அனுபவங்கள் அவர்களது இயல்பான விருத்தி மற்றும் வளர்ந்தோராக முழு உள்ளாற்றலை அடையும் உரிமை என்பவற்றைப் பாதிக்கின்றது. வீட்டில் வன்செயலை அனுபவித்தல் குழந்தைகளுக்கு அத்தகைய நடத்தையை எடுத்துக்காட்டாக கருதுவதற்குக் கூட தூண்ட முடிவதுடன், வயதுவந்த ஆண்களாக அவர்களின் சொந்த நடத்தையை, மற்றவர் மீது வன்செயல் குற்றம் புரியும், முன்மாதிரியாக்குவதற்கு பங்களிப்புச் செய்கின்றது.

பாலகர் மற்றும் குழந்தைகளாக ஆரம்ப வயதிலேயே பெற்றோரால் வன்செயலுக்கு வெளிப்படுத்தப்படும் குழந்தைகள் பலமான குடும்பக் கட்டுக்களை உருவாக்குவதில் சிரமப்படுகின்றார்கள். அவர்கள் மேம்பாட்டு மைல் கற்களை அடைவதில் தாமதமாகலாம், தூக்கக் குழப்பத்தைக் கொண்டிருக்கலாம், மற்றும் பாடசாலையை விட்டு இடைவிலகலாம்.

அவர்கள் இணைநிலையினருடன் பற்றுக்களை ஏற்படுத்துவதில் சிரமப்படக்கூடுவதுடன், மனச்சோர்வு மற்றும் கவலைக்கு உள்ளாகலாம்.அவர்கள் இணைநிலையினர் மீது வன்முறைத் துன்புறுத்தலை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தில் கூட இருக்கலாம். முதிர்ந்த விடலைப்பருவத்தில், பலியாட்களாக இருப்பவர்கள் வீட்டைவிட்டு ஓடுதல் மற்றும் குறிப்பாக நகரங்களில், அதிகரித்துவரும் வீடற்ற இளம் மக்கள் தொகையில்ஒரு பகுதியினராதல்.

இதுவரையில், தனிப்பட்ட வன்முறைச் செயல்களுக்கான துலங்கல், பால்நிலை சார்ந்த வன்செயலைக் கவனத்தில் கொள்ளும் போது அழுத்தம் பாரியளவில் சட்டம் மற்றும் ஒழுங்கு அடிப்படையில் மதிப்பிடப்பட்டிருந்ததுடன்,பலியாட்களான பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளுக்கு தேவையான பாதுகாப்பு உதவிகளை வழங்குவதாக இருந்தது. இலங்கையின் குற்றவியல் நடைமுறை 1990 களின் நடுப்பகுதியில் பால்நிலை சார்ந்த வன்செயல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்களை உள்ளடக்குவதற்காக திருத்தப்பட்டது. இந்தச் சட்டத் திருத்தங்களைத் தொடர்ந்து, சட்ட அமுலாக்க முறைமையின் அர்ப்பணிக்கப்பட்ட கிளையொன்று பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வன்செயலுக்கு எதிராக பதில்வினையாற்றும் விசேட பணியுடன் தாபிக்கப்பட்டது. இது படிப்படியாக மேம்படுத்தப்பட்டு தீவகம் பூராகவும் துஷ்பிரயோகம் மற்றும் வன்செயல் சம்பவங்களை பற்றித் தெரிவிக்கும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பதில்வினையாற்றும் பொருட்டு விசேடமாகப் பயிற்றப்பட்ட பெண் பொலிசாருடன் பரந்த வலையமைப்பாக,பெண்கள் மற்றும் குழந்தைகள் காவற்றுறைக் கருமபீடமொன்று ஏற்படுத்தப்பட்டது. இது பொலிசாரினால் முறைப்பாடுகளுக்கு என உடனடித் தொடர்பு இலக்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டமையையும் கூட உள்ளடக்குகின்றது.

தேசிய குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரசபையும் (NCPA) கூட சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டலுக்கு எதிராக முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ள உடனடித் தொடர்பு இலக்கமொன்றைக் கொண்டிருப்பதுடன், தீவகம் பூராகவும் தனிப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை நடாத்துவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட காவற்றுறை ஆளணியினரையும் கொண்டுள்ளது. குற்றம்புரிந்தோர் தண்டனைகளிலிருந்து விலக்குரிமை பெற்றுத் தப்பிச் செல்லாதிருத்தல் வலியுறுத்தப்படுவதுடன் அவ்வாறு தொடர்கின்றது.

எவ்வாறாயினும், குடும்பம் ஒன்றில் கிடக்கும் மூல காரணங்களைக் கருத்தில் கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பில் தற்பொழுது பாரிய அங்கீகாரம் உள்ளது. இது நெருக்கமான துணை ஒன்றிற்கு மேலதிகமாக, கணவர்கள் மற்றும் மனைவியர் இடையேயான உறவின் தரத்தையும் உள்ளடக்குகின்றது. குழந்தைகள் மீதான அவ்வாறான வன்செயல்களின் எதிர்மறைத் தாக்கம், மற்றும் அதன் மூலமாக எதிர்காலத்தில் வன்செயல் வட்டங்கள் மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பில் அதிக அடையாளப்படுத்தல் தேவைப்படுகின்றது.

குடும்ப மனைகள், பாடசாலைகள், மற்றும் சமுதாயங்களில் வன்செயல் மற்றும் துஷ்பிரயோகம் சிறிதளவும் இல்லாத ஓர் காப்பீட்டு சூழல் மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தைத் தடுப்பது தொடர்பான அத்தியாவசியமான அறிவிற்கான அணுகல் ஆகியன முக்கியமான முன்னுரிமைகளாக உள்ளன. குடும்ப மனைகளில் இருக்கும் ஆண்களிடமிருந்து ஆய்வுத் தகவலைச் சேகரித்திருந்த போதிலும், அறிவிக்கப்பட்ட துஷ்பிரயோகங்களில் சில வேறு சுற்றுப் புறங்களிலும் இடம்பெற்றிருக்கலாம். குடும்பங்களுக்கு மேலதிகமாக, பாடசாலைகள், பயிற்சி நிலையங்கள், குழந்தைக் காப்பக நிறுவனங்கள், அனுபவமற்றவர்களாக சிறுவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கும் சமய நிறுவனங்கள், இளையோர் தடுப்புக்காவல் மற்றும் வீதிகள் என்பன கூட சரியிணையானோர்கள், வளர்ந்த குழந்தைகள், மற்றும் அவர்களைப் பாதுகாப்பதாகக் கருதப்படும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மற்றும் காப்பு வழங்குவோர்களால் துஷ்பிரயோக குற்றம்புரியக்கூடிய சூழ்நிலைகளாகும்.

மக்கள் குடித்தொகை மற்றும் அபிவிருத்தி தொடர்பான கெய்ரோ மாநாடு, பாலினம் மற்றும் ஆண்மை தொடர்பில் கணிசமானளவு முக்கியத்துவம் கொடுத்திருந்தன. இது மக்கள் தொகைக் கட்டுப்பாடு தொடர்பில் அவர்களின் பொறுப்புக்களை நிறைவுசெய்வதில் ஆண்களின் பாத்திரத்தின் முக்கியத்துவத்தைக் கோடிட்டுக்காட்டுவதன் ஊடாக செய்யப்பட்டது. பொருளாதார வழங்குனர்களாக இருப்பதற்கு மேலாக, தாயாருடன் இணைக் காப்பாளர்களாக ஓர் பாத்திரத்தில், தந்தையர்களின் முக்கியத்துவம் தொடர்பில் குறிப்பான கவனம் செலுத்தப்பட்டது. பாலியல் சுகாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் எஸ்ரிஜ எச்ஐவி தடுப்பினைக் கவனித்தல் என்பன மீதும் கூட அதிகரித்த முக்கியத்துவம் வைக்கப்பட்டது. கோடிட்டுக் காட்டப்பட்ட ஏனைய பரப்புக்கள் தாய்க்குரிய சுகாதார விரிவாக்கம் மற்றும் குடும்பத் திட்டமிடலுக்கான பரந்த அணுகல் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், பெண்களுக்கு எதிரான வன்செயல் தடுப்புமற்றும் கட்டுப்பாடு குடும்பமொன்றினுள் அவ்வாறான சகல ஒட்டுமொத்த சூழமைவினுள் நோக்கப்பட்டது. இது குடும்பத் திட்டமிடலில் மாத்திரம் குவியப்படுத்தப்பட்ட முன்னைய ஒடுங்கிய நிலையிலிருந்து மிகவும் மாறுபட்டது.

கெயாரினால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு, அது நாம் பால்நிலை எனப் பொதுவாகக் கருதுவதனை ஆண்மைக்குரியனவற்றை உள்ளடக்கும் பொருட்டு விரிவாக்குதல், இலங்கை ஆண்கள் மற்றும் பெண்கள் ஒருவரோடொருவர் எவ்வாறு தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்பது தொடர்பிலான விளக்கத்தை விரிவாக்குதல், குடும்பம் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயலைக் கவனிப்பதில் இவை யாவும் முக்கியமானவையாக இருக்கும் இந்தச் சூழமைவில், காலத்திற்குப் பொருத்தமானது. ஏனைய ஆய்வுகளைப் போலல்லாது அது பிரதானமாகப் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் மற்றும் அவர்களின் அனுபவங்கள் மீது குவியப்படுத்தப்பட்ட செல்நெறியைக் கொண்டிருந்த இந்த ஆய்வு, ஆய்வுப் பரப்புகள் மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், மனவதிர்ச்சி மற்றும் புறக்கணிப்பு என்பன தொடர்பில் ஆண்களிடமிருந்து தரவுகளைத் திரட்டியிருக்கின்றது. பால்நிலை சார்ந்த வன்செயலின் ஓர் சாத்தியமான தீர்மானிக்கும் காரணியாக சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் மனவதிர்ச்சி அனுபவங்கைளச் சேர்த்தல், குறிப்பாகப் பாலியல் துஷ்பிரயோகம், அடையாளம் காணப்பட்ட ஓர் புதிய பரிமாணமாக இருக்கின்றது, ஆகவே கவனிக்கப்படுகின்றது. நேர் காணப்பட்ட ஆண்கள் அவர்களது குழந்தைப்பராய பாலியல் துஷ்பிரயோக அனுபவங்களை வெளிப்படுத்திய உண்மை கவனத்தைக் கவர்வதாயிருந்ததுடன் அது தொடர்பில், அத்தகைய தகவல்களை வெளியிடுவதற்கான சுபாவம் பொதுவாகக் குறைவானதாகவே கருதப்படுகின்றது.

குழந்தைப்பராய மனவதிர்ச்சியை அளவிட ஆய்வில் பயன்படுத்தப்பட்டது சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். உடல்சார் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, மனவெழுச்சித் துஷ்பிரயோகம் மற்றும் உடல்சார் கஷ்டங்கள் ஆகிய விடயப் பரப்புகளின் கீழ் வினாக்கள் வினவப்பட்டன. வினவலின் போது, பதிலளிப்பவர் விசேடமாக எத்தனை தடவைகள், ஒருபோதுமில்லை, சிலவேளைகளில், பலமுறை, மிகப் பலமுறை, என்பன பற்றி வினவப்பட்டார். குழந்தை மனவதிர்ச்சிப் பரப்பில் பதில்களின் அடிப்படையில் தாழ்ந்தது முதல் உயர்ந்தது வரையான வீச்சு உள்ள எண் அளவிடை ஒன்றும் கூடத் தயாரிக்கப்பட்டது.

ஆய்வின் முடிவுகள் மூல காரணங்களை கவனத்தில் கொள்ளும் தடுப்பு நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு மற்றும் அவ்வாறான துஷ்பிரயோக சம்பவங்களின் எதிர்வினைகளை மேம்படுத்துவதற்கு ஓர் பயனுள்ள தளத்தை உருவாக்குகின்றன.

# பிரதான முடிவுகளின் சுருக்கம்

## பாலியல் துஷ்பிரயோகம்

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகதிற்கு எந்தச் சர்வ வியாபகமான வரைவிலக்கணமும் கிடையாது. ஒரு பொதுவான வரைவிலக்கணம் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தை ஓர் வளர்ந்தவர் அல்லது முதிர்ந்த வளரும் பருவத்தினர் குழந்தையொன்றைத் தமது சொந்தப் பாலியல் சந்தோசத்திற்கு மற்றும் தூண்டுதலுக்கு பயன்படுத்தல் ஓர் சிறுவர் துஷ்பிரயோக வடிவமென விபரிக்கின்றது. வயதுவந்தவர் ஒருவருக்கும் பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட்டவயதிற்குக் கீழ்பட்ட குழந்தை ஒருவருக்கும் இடையேயான எந்த பாலியல் செயற்பாட்டினையும் பாலியல் துஷ்பிரயோக நடத்தை பொதுவாக குறிப்பிடுகின்றது. இலங்கையில் மகளிருக்கு இது 16 வருடங்கள். ஆண்களுக்கு அத்தகைய எந்தக் குறிப்பும் இல்லை. முதிரா வயதினர்கள் இடையேயான உடனிணக்கமற்ற பாலியல் செயற்பாடு, அல்லது 18 வருடங்களுகுக் கீழ்பட்ட குழந்தை மற்றும் அதிகாரத்தில் அல்லது குழந்தை மீது அதிகாரம் செலுத்தும் ஒரு நிலையிலுள்ள வயதுவந்த நபரொருவர் இடையேயான ஓர் பாலியல் செயற்பாடு சிறுவர் பாலியல் துஷ்பிரயோக வடிவமாகும். அவ்வாறான பாலியல் செயற்பாடு, பாலுறுப்புகள் தடவப்படுதல், சுய இன்பம், வாய் மூலமான பாலியல், ஆணுறுப்பு, விரல் அல்லது பொருளொன்றால் யோனி அல்லது ஆசனவாய் உட்புகல், முலைகளைக் கொஞ்சுதல், நெருக்கமான நடத்தைகள், உடைமாற்றுதல் என்பனவற்றை உளவு பார்த்தல் (voyeurism), இன உறுப்பைக் காட்டி மகிழ்தல், குழந்தைகளைக் பாலியல் படங்களில் வெளிப்படுத்தல் அல்லது சம்பந்தப்படுத்தல்.

மூன்றில் இரண்டு விகிதத்திற்கு மேற்பட்ட ஆண்கள் குழந்தைப்பராயத்தில் பாலியல் துஷ்பிரயோகத்தை தெரிவிக்காதிருக்கும் அதேவேளை மூன்றில் ஒருவர் அவ்வாறு செய்திருந்தனர். அவர்கள் துஷ்பிரயோகம் சிலவேளைகளில், பல தடவை அல்லது மிகப் பல தடவை இடம்பெற்றதாகக் கூறினர். சிலர் அவர்களுடைய தொடைகள், பின்புறங்கள், பாலுறுப்புகள் தொடப்பட்டதாக அல்லது தமது விருப்பத்திற்கு மாறாக வேறொருவரின் அந்தரங்க பாகங்களைத் தொட வற்புறுத்தப்பட்டதாகக் கூறினர். அவ்வாறான குற்றங்களைப் புரிந்த குற்றம்புரிவோரின் குறிப்பு தொடர்பான எந்தத் தகவல்களும் இருக்கவில்லை. ஆனால், அவர்கள் தமது விருப்பத்திற்கு மாறாக துஷ்பிரயோகம் இடம்பெற்றதாக தெரிவித்திருந்தனர், அதுவே சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் வழமையான கோலமாகும்.

பத்தில் ஒரு ஆண்கள் குழந்தைப்பராயத்தில், தாம் "பாலியல் தன்மையானதொரு வேண்டத்தகாத சம்பவங்களுக்கு" வெளிப்படுத்தப்பட்டு இருந்ததாகத் தெரிவித்திருந்தனர். தடவைகளின் அடிப்படையில், அவர்களில் அநேகர், அவர்களில் சிலர் மற்றும் அவர்களின் ஒரு சிலர் அது பல தடவை, மற்றும் மிகப் பலதடவை என்று கூடக் கூறினர். பத்தில் ஒருவருக்கு மேலானோர் அவர்களின் சம்மதமின்றி பாலியல் படங்களுக்கு வற்புறுத்தி வெளிப்படுத்தப்பட்டதாக தெரிவித்திருந்தனர். பாலியல் துஷ்பிரயோக வரலாற்றைக் கொண்ட வயதுவந்த ஆண்கள் பூகோளப் பரம்பலின் அடிப்படையில், நிலவுகை கிட்டத்தட்ட அரைவாசி பாதிக்கப்பட்டு, (47%) கொழும்பில் உயர்வாகவும், தொடர்ந்து நுவரெலியாவில் மூன்றில் ஒருவர், மற்றும் அம்பாந்தோட்டை மற்றும் மட்டக்களப்பில், கிட்டத்தட்ட ஐந்தில் ஒருவர்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் ஏனைய ஆய்வுகள் மற்றும் காவல் துறை தகவல்களில் வெளிக்கொணரப்பட்டவாறு, துஷ்பிரயோகக் குற்றச்செயலில் ஈடுபடுவோர் அநேகமாக குழந்தை பலியாளுக்குத் தெரிந்த ஆளாக, குடும்ப உறுப்பினர்கள் உட்பட, குடும்பங்களின் "நண்பர்கள்" குறிப்பாக வயதுகூடிய ஆண்கள் இருந்திருக்கின்றனர். ஆய்வு மாதிரியில் ஒரு சிறிய வீதத்தினர் அவர்கள் சிலவேளைகளில் சமுதாயத் தலைவர்களுடன், வயதுவந்தவர்களாக இருக்கும் போதே, பாலியல் மற்றும் உடல் உறவு வைத்துக் கொள்வதற்கு நிர்பந்திக்கப்பட்டதாக தெரிவித்திருந்தனர்.

குழந்தைப்பராயத்தில் பலியாளாதல் மற்றும் இளமைப்பருவத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்செயல் என்பவற்றிற்கு இடையே ஓர் சாத்தியமான தொடர்பு இருக்கின்ற அதேவேளை, குழந்தைப்பராயத்தில் துஷ்பிரயோகத்தை அனுபவித்த சகல ஆண்களும் வன்செயல் குற்றம்புரிவோராவர் என்ற முடிவுக்கு வரக் கூடாது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியுள்ளது. ஆனால் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எதிர்விளைவைக் காட்டல் மற்றும் தடுத்தல் அதுவே முக்கியமானதாக இருப்பதுடன் முன்னர் அவதானம் செலுத்தியிருப்பதை விட மிகவும் முக்கியமானது.

சிறுவர் துஷ்பிரயோகத்தின் ஒரு தற்காலிக உறவு பெண்களுக்கு எதிரான வன்செயலுடன், எல்லா சந்தர்ப்பங்களிலும் இல்லாவிடினும், ஆனால் குறைந்த பட்சம் சில சூழ்நிலைகளில், அதன் நிலவுகைக்கான பலமான சாத்தியக்கூறு இருந்த போதிலும், தரவு திரட்டப்பட்ட விதத்தில் அதனைத் தீர்மானிப்பது சாத்தியமானதாக இருக்கவில்லை என்பது கூட கவனிக்கப்படுவது முக்கியமானதாகும்.

## ஆண்கள் மீது ஆண்களின் வன்முறை

ஆண் பாலியல் வன்செயல் மற்றும் ஓரினச்சேர்க்கையாளர் பயம் மீதான தரவு தொடர்பாக, பத்தில் ஒருவருக்கு மேல் தாம் சிறுவன் ஒருவன் அல்லது ஆணுடன், தன்னிச்சையாகவோ அல்லது நிர்பந்திக்கப்பட்டோ, பாலியல் சம்பந்தமாக ஏதாவது செய்ததாகக் கூறினர். இந்த எண்ணிக்கையில்

அரைவாசியை விடக் குறைவான ஆண்கள் வேறு ஆண் அல்லது சிறுவனுடன் பாலியல் வன்செயல் புரிந்ததாக ஏற்றுக்கொண்டனர்.

இந்தக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில்,குழந்தைப்பராயத் துஷ்பிரயோகம், குறிப்பாக சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகம் இலங்கையில் கணிசமானளவு தூரத்திற்கு, நன்றாக அறிவிக்கப்படாது அல்லது பரந்தளவில் தீர்மானிக்கப்படாது இருந்தபோதிலும், இடம்பெறுகின்றது என்ற முடிவுக்கு வர முடியும். அநேகமான பலியாட்கள் அவ்வாறான துஷ்பிரயோகங்களை ஒரு இரகசியமாக வைத்திருப்பதும் ஆகவே குணப்படுத்தலை மேம்படுத்துவதற்கு அவசியமாகவிருக்கின்ற சிகிச்சை மற்றும் ஆலோசனைச் சேவைகளை அணுகாதிருத்தலுக்கான சாத்தியம் இருக்கின்றது. குழந்தைப்பராயத்தில் கவனிக்கப்படாதிருத்தல், துஷ்பிரயோக அனுபவங்கள் அவர்கள் வயதுவந்த ஆண்களாகும் போது அவர்கள் மீது தாக்கம் செலுத்த முடியும்.

கவனிக்கப்பட வேண்டிய பிறிதொரு தோற்றப்பாடு சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகம்,கற்பித்தல் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பகிடிவதை என்ற பெயரில், கும்பல்களின் உறுப்பினர்களாக, மற்றும் வயதுவந்த ஆண்களின் பலியாட்களாக, ஓரினச்சேர்க்கையாளர் என்ற பயத்தினால் வன்செயலில் ஈடுபடுகின்றார்கள். அவ்வாறான செயல்கள் அனேகமாக இரகசியமாகப் பேணப்படுகின்றது. ஓரினப்பாலியல் இலங்கையில் சட்டவிரோதமான செயலாகும், ஆனால் சம்மதத்துடன் இரண்டு வயதுவந்த ஆண்களுக்கு இடையேயான பாலுறவு மற்றும் வயதுகுறைந்த சிறுவன் ஒருவன் மீதான நிர்பந்திக்கப்பட்ட பாலுறவிற்கும், அது குழந்தையொன்றின் மீதான பாலியல் துஷ்பிரயோகம், இடையேயானவித்தியாசம் ஏற்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது. பிந்திய குழந்தைப் பலியாட்களின் வகையில், அது ஒரு குற்றச்செயலென்பதுடன் நடப்பிலுள்ள சட்டங்களுக்கு இணங்க சட்டப்படியான குற்றமொன்றாக நிர்வகிக்கப்பட வேண்டியிருக்கின்றது.

## குழந்தைப்பராய மனவதிர்ச்சியின் வேறு வடிவங்கள்

ஆய்வு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு மேலதிகமாக,குழந்தைப்பராய மனவதிர்ச்சி, துஷ்பிரயோகம், மற்றும் புறக்கணிப்பு என்பனவற்றின் வேறு வடிவங்கள் நிகழ்வதனையும் கூடத் தீர்மானித்திருக்கின்றது. இது நெருங்கிய துணை மீதான வன்செயல் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயல் என்பவற்றுடன் தொடர்பொன்று இருக்க முடியும் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆண்களில் அரைவாசியை விட குறைவானோர் (44%), குழந்தைப்பராயத்தில் ஏதோ ஒரு விதமான மனவெழுச்சித் துஷ்பிரயோகத்தை அறிவித்திருக்கின்றார்கள். இது குடும்ப உறுப்பினர்களால் சோம்பேறி, முட்டாள், அல்லது வலுக்குறைந்தவர் என அழைக்கப்படுதல், மற்றும் ஏனையோர் முன்னிலையில் இகழ்ச்சி மற்றும் அவமதிப்பால் துன்புறல் என்பவற்றையும் உள்ளடக்கியது. மூன்றில் ஒரு விகிதத்திற்கும் மேலானோர் ஏதோ ஒரு விதமான மனவெழுச்சிப் புறக்கணிப்பு, உதாரணமாக பத்தில் ஒருவர், பெற்றோர் சிலவேளைகளில் அவர்கள் மீது அக்கறை கொள்வதற்குக் கூட முடியாதளவு மிகவும் குடித்து அல்லது போதைக்கு உட்பட்டிருத்தல், மிகச் சொற்ப அளவில், இது பலதடவைகளாக இருந்தது.

ஏறக்குறைய மூன்றில் ஒருவர் அவர்களின் தாய் அவர்களது தந்தையால் அல்லது தாயாரின் காதலன் ஒருவனால் அடித்துத் தாக்கப்படுவதை பார்த்து அல்லது கேட்டிருக்கின்றார்கள்.

உடல்சார் துஷ்பிரயோகம் தொடர்பில், மூன்றில் ஒருவருக்கு மேலானோர், ஏதாவது விதமான மனவெழுச்சி துஷ்பிரயோகம் உட்பட, அது சிலவேளைகளில் நிகழ்ந்ததாகக் கூறியிருந்தனர். பத்தில் ஒன்றிற்குக் குறைவானோர் சிலவேளைகளில் வேறு இல்லங்களில் வாழ்வதனால் துன்புற்றிருக்கின்றார்கள். அவர்கள் அவ்வாறு செய்தார்களென பெற்றோர்கள் அறியாதிருந்த போதிலும் 12 இல் ஒருவர் சிலவேளைகளில் அவர்களது வீட்டிற்கு வெளியே நேரத்தைச் செலவிட்டு இருக்கின்றார்கள். ஒரு சிறு வீதத்தினர் தாம் அவ்வாறு பலதடவை செய்ததாக தெரிவித்திருக்கின்றார்கள்.

சுமார் மூன்றில் ஒருவர் அவர்கள் சிலவேளைகளில் உண்பதற்கு எதுவுமின்றி இருந்ததாகக் கூறினர், அத்துடன் சொற்பமானோர் அது அடிக்கடி நிகழ்வதாகக் கூறினர். இது மட்டக்களப்பில் உயர்வாகவும், அடுத்து நுவரெலியா மற்றும் பின்பு கொழும்பு.

சற்றேறக்குறைய நான்கில் ஒருவர் சில அல்லது வேறு விதமான உடல்சார் துஷ்பிரயோகத்தை அனுபவித்ததாக அறிவித்திருந்தனர்

- அரைவாசி பாடசலைகளில் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களால் உடல்சார் தண்டனைக்கு உள்ளானதாக அறிவித்திருந்தனர். இது சிலவேளைகளில் அல்லது அடிக்கடி இடம்பெற்றது.
- ஏறக்குறைய மூன்றில் ஒருவர் சிலவேளைகளில் தடியொறினால் அடிக்கப்பட்டிருந்தனர் அல்லது கசையடித் தண்டனையால் வருந்தியிருந்தனர்.
- சற்றேறக்குறைய மூன்றில் ஒருவர் குழந்தையாக ஏதோ ஒரு விதமான மனவெழுச்சித் துஷ்பிரயோகங்களை அனுபவித்ததாக அறிவித்திருந்தனர்.
- மூன்றில் ஒருவர் அவர்களின் தாயார் அவளது கணவரால் அல்லது காதலனொருவனால் அடிக்கப்படுதலை குறைந்த பட்சம் சிலவேளைகளில் கண்டிருந்தனர்.

## ஆஜராகாத பெற்றோர்கள்

ஒரு கணிசமான எண்ணிக்கையான தந்தையர்கள், குழந்தைகளுக்கு முக்கியமான மனவெழுச்சி உதவி மற்றும் பிணைப்பினை பறித்து, சமமாகவோ அல்லது கணிசமானளவு தூரம் கூட அவர்களின்

குழந்தைகளைப் போற்றி வளர்ப்பதில்பங்கேற்றிருக்கவில்லை என அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இது இரண்டு காரணிகளை விவரிக்கின்றது. ஒன்று எட்ட நிற்கும் தன்மை மற்றும் அவர்களின் குழந்தைகளிடமிருந்து விலகியிருத்தல், மற்றும் பராமரிப்புச் செயற்பாடொன்று இல்லாமை தந்தை ஒருவரின் பாத்திரம் தொடர்பில் அவர்களது சொந்த புலப்பாடு பற்றியும், ஆண்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பது பற்றியும் அவர்களுக்கு கூறலாம். பிறிதொன்று இவைகள் "பெண்தன்மையான" பண்புத்தரங்கள் என்பது அவர்களது எண்ணமாயிருக்கும். பிறிதொரு காரணி பௌதிகப் பிரிவு அது பெரும்பாலும் தந்தையர் பணி நிமித்தம் வேறு இடங்களுக்கு குடிபெயர வேண்டியிருக்கும் போது தோன்றுகின்றது. அவ்வாறன ஆண்கள் தமது குழந்தைப்பராயத்தில் தமது தந்தையர் அவர்கள் தொடர்பில் காட்டிய மனப்பான்மை மற்றும் நடத்தைகளைத் திரும்பச் செய்யும் சாத்தியம் உள்ளது.

மொத்தம் 245 எதிர் மனுதாரர்களில், அரைவாசிக்கும் குறைவானோர் 18 முதல் 24 வயதுக் குழு, மற்றும் 25 முதல் 34 வயதுக் குழு, அத்துடன் மூன்றில் ஒருவர் 35 முதல் 49 வயதுக் குழுவிலும் அவர்களது குழந்தைகளுடன் ஓர் நடுத்தர மட்ட ஈடுபாட்டினைக் கொண்டிருந்தனர். பெரும்பான்மையோர் ஓர் தாழ்ந்த மட்ட ஈடுபாட்டினைக் கொண்டிருந்தமை இது அவர்களின் குழந்தைகளை பாதித்திருக்கக்கூடிய ஓர் பிரச்சினையாக பிரகடனப்படுத்துகின்றது. உயர்ந்த ஈடுபாடு 35 முதல் 49 வரையான கூடிய வயதுகளில் 60% இனை விட அதிகமாக இருந்தது.

நான்கில் ஒரு விகிதமான ஆண்கள் அவர்கள் வளரும்போது, அவர்களின் தாயார் அரிதாக வீட்டில் இருந்ததாக அல்லது ஒருபோதுமே வீட்டில் இல்லாததாக அறிவித்திருக்கின்றார்கள். ஆண்களில் 77% மானோர் அவர்களின் உயிரியல் தந்தையை விட, வளரும் போது அவர்களது வாழ்வில் வேறு எந்த முக்கியமான ஆண் நபர்களும் இருந்திருக்கவில்லை என அறிவித்திருக்கின்றார்கள். அவர்கள் வேறு மாவட்டங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போதுதந்தையர் ஆஜராகாது இருந்தனர். இது குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உயர்வாக இருந்ததுடன், அவர்களின் சொந்த மாவட்டங்களில் வேலைவாய்ப்பின்மை காரணமாகவிருந்தது. ஆண்களினால் மிதமிஞ்சியதான மதுபான நுகர்வு பிறிதொரு பாரதூரமான பிரச்சினையாக இருந்து, குறிப்பாக பெருந்தோட்டப் பிரதேசங்களில், குடும்ப வாழ்வினையும் குழந்தைகளின் நலனையும் பாதிக்கின்றது.

## வன்செயலின் ஆரோக்கியத் தோற்றப்பாடும் குழந்தைகள் மீதான தாக்கமும்

- பெண்களுள் அவர்களது கணவர்களால் அல்லது ஆண் துணைவர்களால் உடல்ரீதியாகத் துஷ்பிரயோகம் செய்யப்பட்டவர்களில் சற்றேறக்குறைய அரைவாசிப் பேர் காயங்களினால் வருந்தினர். சிலர் சிறிதுகாலம் படுக்கையாய் இருந்ததுடன், ஏனையோர்களுக்கு மருத்துவ கவனிப்புத் தேவைப்பட்டது. அவ்வாறான சகல சந்தர்ப்பங்களும் அவர்களது பிள்ளைகளால் அவதானிக்கப்பட்டிருக்கும் என்பதுடன் அவர்கள் மீது ஓர் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க முடியும்.
- மூன்றில் ஒரு விகிதமான பெண் பலியாட்கள் மட்டுமே மருத்துவப் பராமரிப்பைக் கோரியதுடன், எந்த ஆலோசனைச் சேவைகளையும் பெற்றுக்கொண்டிக்கும் சாத்தியம் இல்லை. பின்விளைவுகள் அவளுடைய குழந்தைகளைப் பராமரிப்பதற்கும் கவனிப்பதற்குமான தாயின் திறன் பாதிக்கப்பட்டிருக்க முடியும்.
- மூன்றில் ஒரு விகிதமான பெண்கள் மட்டுமே வன்செயல் பற்றி காவல் துறைக்கு அறிவித்திருந்தனர். அவ்வாறான துஷ்பிரயோகம் மறைக்கப்படுகின்ற குடும்பங்களில் உள்ள குழந்தைகள் கூட தாமும் வன்செயலை அறிவிக்கக்கூடாது என்று கற்றுக்கொள்வதுடன், சமூகக் களங்கம் காரணமாக இரகசியமாக வைத்திருப்பார்கள்.
- பத்தில் ஒரு விகிதமான பெண்கள் மாத்திரம் தகவலைத் தமது குடும்பத்துடன் பகிர்ந்து கொண்டிருப்பர். ஆண்களினாலான வன்முறைக் குற்றச்செயல் தொடர்பில் பொதுவாகப் பெண் பிள்ளைகள் இரகசியம் பேணினர்.
- தமது குடும்பத்தில் குடும்ப வன்முறையை அனுபவித்திருந்த ஆண் பிள்ளைகள் அடாவடித்தனமாக ஆவதுடன், உளச்சோர்வடையும் பாரிய ஆபத்தில் உள்ளனரென ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. புள்ளிவிபர அடிப்படையில் முக்கியத்துவமற்றதாக இருந்த போதிலும், இளமைப்பராயத்தில் குடும்ப வன்செயல் மற்றும் நெருங்கிய துணை மீதான வன்செயல் குற்றம்புரிபவர்களாக இருந்த ஆண்கள், அவர்கள் அவர்களது அன்னையர்கள் குடும்ப வன்செயலுகுப் பலியானதை நேரில் கண்டிருந்த குடும்பங்களிலிருந்து வந்தவர்களாகத் தெரிவித்திருந்தனர்.

## நடப்பிலுள்ள கொள்கைகளும் நிகழ்ச்சித்திட்டங்களும்

குழந்தைத் துஷ்பிரயோகம் தொடர்பான கொள்கைகள் தேசிய குழந்தைகள் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது, அது இலங்கையினால் 1992 இல் பின்னேற்பளிப்புச் செய்யப்பட்ட சிறுவர் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் வழக்காறின் பிரிவுக்கூறு 34 இனை அடிப்படையாகக் கொண்டது. அது பொருத்தமான பொதுவான நடவடிக்கைகளை எடுப்பதனை உள்ளடக்குகின்றது, அது பொருத்தமான அரச திணைக்களங்கள் மற்றும் பொருத்தமான அரச சார்பற்ற நிறுவனங்களை இனங்காணுதல் மற்றும் ஒருங்கிணைத்தல், சகல சட்டமியற்றல், கொள்கைகள், மற்றும் நடைமுறைகள் குழந்தைகளுக்கான பிரிவுக் கூறுடன் நீதி பரிபாலனத்தின் சகல பகுதிகளுடனும் பொருந்துந் தன்மை என்பவை தொடர்பில் மீள்நோக்கு ஒன்றினை மேற்கொள்ளல் மற்றும் முழு அமுலாக்கத்தை உறுதிசெய்வதற்கு மூலோபாயம் ஒன்றைப் பின்பற்றல். ஏனைய பரப்புகள் தேவையான வளங்களை ஒதுக்குதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பொறிமுறைகள், பிரிவுக்கூறு 34 இனை பரவலாக பலரும் அறியும்படி செய்தல் மற்றும் சிறுவர்களுக்காக அல்லது அதனுடன் பணியாற்றும் சகல குழுக்களுக்கும் பயிற்சிகளை ஏற்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. ஐக்கிய நாடுகள் சிறுவர் உரிமைகள் வழக்காற்றை (UNCRC)அடிப்படையாகக் கொண்ட, அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டிருக்கும், தேசிய சிறுவர் சாசனம் செயல் நடவடிக்கைகளுக்கான கொள்கைக் கட்டமைப்பொன்றை வழங்குகின்றது. 50 ஆம் இலக்கத் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சட்டம், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் உட்பட, சிறுவர்களை துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டலிலிருந்து பாதுகாப்பது தொடர்பில் குறிப்பாக கவனக்குவியத்தை கொண்டிருக்கின்றது. குழந்தைகள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட தேசிய செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று கூட இருக்கின்றது, அது சிறுவர் துஷ்பிரயோக, குறிப்பாக பாலியல் துஷ்பிரயோகத், தடுப்பு மற்றும் பதில்வினை தொடர்பில் பிரத்தியேக தலையீடுகள் மற்றும் செயற்பாடுகள் கொண்டிருக்கின்றது.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோக குற்றம்புரிவோருக்கு எதிராக குற்றவியல் சட்ட அங்கீகாரங்களை உள்ளடக்குவதற்கு குற்றவியல் சட்டம் 1995/1996 இல் திருத்தப்பட்டது. சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்செயலுக்கு எதிரான ஓர் பதில்வினையாக தீவகம் பூராகவும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் காவற்றுறைக் கருமபீட வலையமைப்பு ஒன்றினை உள்ளடக்குவதற்கு சட்ட அமுலாக்கம் கூட விரிவாக்கப்பட்டது.

பால்நிலை சார்ந்த வன்செயல் தொடர்பில் ஐக்கிய நாடுகள் குவியப் புள்ளி ஒன்று உள்ளது. UNICEF, UNFPA மற்றும் WHO, போன்ற ஐக்கிய நாடுகள் முகவரகங்கள் உள்ளூர்ப் பங்காளிகளான, அரசாங்கம் மற்றும் குடிசார் சமுதாய நிறுவனங்கள் இருபகுதியினருடனும், பிரத்தியேக கருத்திட்டங்களில் கூட்டுழைக்கின்றன. பெண்களின் ஆராய்ச்சி மற்றும் பரிந்துபேசும் நிலையம், பெண்கள் மற்றும் ஊடகம் மற்றும் வேறு குடிசார் சமுதாய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஆய்வு உள்ளது.

# பரிந்துரைசெய்யப்பட்ட தலையீடுகள் மற்றும் மூலோபாயங்கள்

## அடிப்படைக் காரணங்கள்

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எளிதில் இலக்காகும் ஆண் பிள்ளைகளின் நிலையைக் கவனிப்பதற்கு ஒரு நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட பதில்வினை, பால்நிலை சார்ந்த வன்செயலில் அதன் பொருத்தப்பாட்டிற்கு மேலதிகமாக அதன் சொந்த முக்கியத்துவத்தின் அடிப்படையில், இலக்கொன்றாக நிர்ணயிக்கப்பட வேண்டியிருக்கின்றது.

பிரச்சினைகள் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்துடன் தொடர்புபட்ட ஓர் பல்- துறைத் தன்மையானதாக இருப்பதனால், சகல பொருத்தமான நிறுவனங்களும் பார்வையிலுள்ள ஒரு பொது இலக்குடன் ஒன்றாகப் பணியாற்ற வேண்டியது அவசியமானதாக இருக்கின்றது. இது சமுதாயம் சார்ந்த முனைப்புகள், அறிக்கையிடும் முறைமையை மேம்படுத்தல், சட்ட அமுலாக்கத்தை வலுவூட்டல், நீதி மன்ற வழக்குகளைத் துரிதப்படுத்தல், தம்மைத் தாமே பாதகாப்பது மற்றும் துஷ்பிரயோகத்தை அறிவிப்பது தொடர்பாக சிறுவர்களுக்கான கல்வி உட்பட விழிப்புணர்வை மேம்படுத்தல், மற்றும் பலியாட்களுக்கான சிகிச்சை மற்றும் ஆலோசனைச் சேவைகளுக்கான அணுகலை விரிவாக்கல் என்பனவற்றை உள்ளடக்குகின்றது. சகல குழுக்களிலும் உள்ள குழந்தைப் பலியாட்களுக்கும் பாதுகாப்புத் தேவை.

ஆண்மைக்குரிய ஆண் மாதிரிகள் குழந்தைப்பராயத்தில் ஏற்படுத்தப்பட ஆரம்பிக்கின்றது. குழந்தைப்பராய அனுபவங்கள், குறிப்பாக வீட்டுச் சூழலில் பலமானதொரு செல்வாக்கைக் கொண்டிருக்கின்றது. ஆனால் குழந்தை ஒன்று வளரும்போது, குறிப்பாக இளமைப்பராயத்தில் ஊடகம் போன்ற வன்செயல் நடத்தைகள் பின்பற்றப்படுவதில் பங்களிக்கக்கூடிய, குறிப்பாக பெண் பிள்ளைகள் மற்றும் பெண்களை நோக்கிய, வேறு செல்வாக்கு மற்றும் இணை நிலையினரின் அழுத்தம் அதிகமாக இருக்கின்றது. இளமைப்பராயத்தினர், இளைஞர் மற்றும் ஏனைய ஆண்கள் மத்தியில் ஓர் சமூகக் கடப்பாடாக வன்செயலற்ற நடத்தைக் கோலங்களை உயர்த்துவதில் ஊடகம் மிகவும் செயற்றிறனுடன் ஆதரிக்க முடியும் என்பதுடன் ஆதரிக்க வேண்டும்.

## மூலோபாயங்கள்

தடுப்பு மற்றும் பாரிய துலங்கல் ஆகிய இரண்டும் முக்கியமானது. இது சிறுவர்கள் இடரில் இருக்கும் சகல நிறுவனங்கள் உட்பட குடும்பத்தில், சமுதாயத்தில் அத்துடன் தேசிய மட்டத்தில் அவசியமாக இருக்கின்றது. இது பொதுவாக சகல சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் துலங்குவதுடன் மட்டுமல்லாது, ஆய்வில் அடையாளம் காணப்பட்ட, இதுவரையில் போதியளவில் கவனம் செலுத்தப்படாத ஆண் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்துடன் தொடர்பான பிரைச்சனைகள் தொடர்பில் மேலதிக அவதானம் செலுத்துவதனை உள்ளடக்க வேண்டும்.

வீடு மற்றும் சமுதாய மட்டத்திலான நன்கு குவியப்படுத்தப்பட்ட, குழந்தைப்பராயப் புறக்கணிப்பு, சுரண்டல், மற்றும் வேறு தீங்கான நடைமுறைகளைக் குறைக்கக்கூடிய, பலவீனமான குழந்தை வளர்ப்பு நடைமுறைகள் உட்பட, தலையீடுகள் முக்கியமானவைகளாக இருக்கின்றன. பாடசலைகள், குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்கள், தொழில்சார் பாடசாலைகள், பயிற்சி நிறுவனங்கள், குழந்தைப் பராமரிப்பு இல்லங்கள் மற்றும் சிறுவர் தடுப்புக்காவல் நிலையங்கள் ஆகியவற்றில் கூடத் தலையீடுகள் தேவையாக இருக்கின்றன. வீதிகள் அத்துடன் அனுபவமற்றவர்களாக சிறுவர்கள் சேர்த்துக் கொள்ளப்படக்கூடிய சமய நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள வீடற்ற சிறுவர்களை எட்டுவதற்கு விசேட தலையீடுகள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளது. அவ்வாறான சகல சந்தர்பங்களில் ஆண் சிறுவர்கள் வயதுகூடிய இணைநிலையினர் மற்றும் இளம்பராயத்தினரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு மிகவும் எளிதில் இலக்காகக் கூடியவர்களாக உள்ளனர். அத்தகைய சந்தர்ப்பங்களில் சிறுவர் உரிமைகளின் செந்தரங்கள் தொடர்பில் அதிக எச்சரிக்கை மற்றும் கண்காணிப்புக்கான தேவை ஒன்றுள்ளது. தகுதியான மற்றும் நன்கு பயிற்றப்பட்ட, ஆட்சேர்ப்புக்கு முன்னர் நன்கு இடைத் தடுப்பிடப்பட்ட, ஊழியர்களை ஆட்சேர்த்தல் மற்றும் ஓர் ஒழுங்கான அடிப்படையில் மேற்பார்வை செய்தல் என்பன சிறுவர் துஷ்பிரயோத்திலிருந்து தரமான பாதுகாப்பினை வழங்குவதன் அத்தியாவசியமான தோற்றப்பாடுகளாக உள்ளன. அவ்வாறன சகல சந்தர்ப்பங்களிலும் சிறுவர்கள் துஷ்பிரயோகத்தைப் பற்றி, குறிப்பாக பாலியல் துஷ்பிரயோகம், அது இடம்பெறுமானால், தெரிவிப்பதற்கான இரகசியமான முறைமை ஒன்று தேவையாக உள்ளதுடன், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனித்தனியாக விசாரிக்கப்படும்.

தடுப்பிற்கு சமுதாய மட்டத் தலையீடுகள் தேவையாக உள்ளன, அவை வறுமை, வேலைவாய்ப்பின்மை, வெளிநாட்டில் குடியேறிய தாய், மதுபானப் பாவனை மற்றும் போதைவஸ்துத் துஷ்பியோகம், ஆஜராகாத தந்தையர்கள் மற்றும் ஒவ்வொரு பூகோள அமைவிடம் தொடர்பிலான வேறு காரணிகள் காரணமாக, அவ்வாறான துஷ்பிரயோக இடரிலுள்ள குடும்பங்களுக்கு உதவியளிக்கின்றன. குழந்தை வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் முக்கியமானவையாக உள்ளதுடன் இடரிலுள்ள குடும்பங்களுக்கு சமுதாய மட்ட உதவி முறைமைகளுக்கான அணுகலும் முக்கியமானது.

தலையீடுகளைத் திட்டமிடல் மற்றும் தயாரித்தலில், பிரதேச அடிப்படையிலான அணுகுமுறைகள் பரிந்துரைக்கப்படுகின்றது, அவை அரச அத்துடன் குடிசார் சங்கம் தொடர்பான, சகல பொருத்தமான துறைகள் மற்றும் பங்குதாரர்களை உள்ளடக்குகின்றன.

சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்தினைக் குறிப்பாகவும் ஆனால் சிறுமிகள் உட்பட, பொதுவாக சகல சிறுவர்களையும் உள்ளடக்கி, அதன் விஸ்தீரணத்தைத் தீர்மானிப்பதற்கு தற்போது கிடைக்கக்கூடியதாய் உள்ளதைவிட மிகவும் பரந்த தரவுத் தளம் ஒன்று முக்கியமானதாக இருக்கின்றது. பிரச்சினை மிக அதிகமாக வியாபித்திருக்கும் இடங்களை அடையாளம் காண்பதற்கு ஓர் பூகோளவரைபடம் தயாரிக்கப்பட வேண்டும். வயதுவந்தவர்களுக்கு மேலதிகமாக, பெற்றோர்களாக மாத்திரம் இருக்க வேண்டிய தேவையில்லை, சிறுவர்கள் தாங்களாகவே சம்பவங்களை அறிவிப்பதற்கான மேலான அணுகல் கூடத் தேவையாக இருக்கின்றது.

குழந்தைப் பலியாட்களுக்கு தரமான சிகிச்சை மற்றும் ஆலோசனைகளுக்கானஓர் விரிவான அணுகல் அத்தியாவசியமாக இருக்கின்றது. NCPA உம் அவ்வாறே பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான காவல் துறையும் சம்பவங்களை அறிவிப்பதற்காக ஓர் உடனடித் தொடர்பு இணைப்பைக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான அறிவிக்கும் முறைமை வினைத்திறன் மற்றும் துஷ்பிரயோகத்திற்குப் பலியான, குறிப்பாக பாலியல் துஷ்பிரயோகத்திற்குப் பலியான, குழந்தைகள் மீதான தாக்கம்என்பவற்றின் அடிப்படையில் மதிப்பிடப்பட வேண்டும். அவ்வாறான முறைமைகள் சேவைகளுக்காகப் பரவலாயிருக்கும் தேவைகளுக்குத் துலங்குமாறு வலுவூட்டி விரிவாக்கப்பட வேண்டியிருக்கலாம்.

சட்ட ஆவணங்கள் கிடைக்கக்கூடியதாயிருத்தல், மற்றும் எவ்வாறு சட்ட அமுலாக்க முறைமை அணுகப்படலாம் ஆகிய இரண்டும் தேவையாக இருப்பதனால் அவைதொடர்பில் விழிப்புணர்வினை அதிகரித்தல். இது உள்ளூர் மட்டத்தில் சட்ட உதவி மற்றும் நீதித் தலையீட்டிற்கான அணுகலை உள்ளடக்குகின்றது.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோக வழக்குகள் எல்லாவற்றையும் பதிவுசெய்து ஆவணப்படுத்துவதற்கு, சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரங்கள் அமைச்சு அத்துடன் NCPA, சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தைத் திணைக்களம் அத்துடன் நீதி அமைச்சு போன்ற நிறுவனங்களின் திறனை மேம்படுத்துவதற்கான ஓர் முக்கிய தேவை உள்ளது. இது ஓர் கால வட்ட பகுப்பாய்வினை மேற்கொள்ள, செல்நெறிகளின் மீள்நோக்கு, புதிய கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் அல்லது நடப்பிலுள்ளனவற்றை பாலியல் துஷ்பிரயோக சிறுவர் பலியாட்களின் மிக உன்னதமான நலன்கருதி மாற்றுதல் என்பன வற்றிற்கு ஓர் அடிப்படையாக இது முக்கியமானதாக இருக்கின்றது. இந்தத் தகவல் மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் பிரிக்கப்பட வேண்டும்.

## தலையீடுகள்

### வீடு மற்றும் சமுதாய மட்டத்தில் முதன்மை தலையீடு – தடுப்பு

சிறுவர்கள் வசிக்கும் இல்லங்கள் மற்றும் அடுத்துள்ள சமுதாயத்தில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் முதன்மைத் தடுப்பு அத்தியவசியமாகும். அநேகமான பாலியல் துஷ்பிரயோகம் நிகழ்வது அன்னியர்களால் அல்ல ஆனால் குழந்தை அறிந்த மற்றும் சேர்ந்துபழகும்,''குடும்பத்தின் நண்பர்கள்'' என்று அழைக்கப்படும், ஆட்களினால் என்பதனை நினைவில் கொள்வது முக்கியமானதாகும்.

இது தொடர்பில், தடுப்பினை மேம்படுத்துவதற்கு, இளம் தம்பதிகளுக்கு ஆரோக்கியம்,உணவூட்டம்,கல்வி மற்றும் ஏனைய விஷயங்களுடன் சிறுவர் துஷ்பிரயோக இடரினைப் பற்றியும் அறிந்து கொள்வது முக்கியமானதாக இருப்பதால் குழந்தை வளர்ப்பு வகுப்புக்கள். குழந்தைகளை எவ்வாறு துஷ்பிரயோகத்திலிருந்து, குறிப்பாக பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் அல்லது முடியும் என்பது தொடர்பிலான தகவல்கள் பொதுமக்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும். முன்பேற்றுக்கால பராமரிப்பு தொடர்பான சேவைகள், நலமான குழந்தைப் பராமரிப்பு மற்றும் முன்பள்ளிக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன நடாத்தப்படும் போது இதுவும் கூட சேர்த்துக்கொள்ளப்படலாம். முன்னதாகக் கண்டுபிடிப்பதற்கு, அறிவிப்பதற்கு மற்றும் தடுப்பதற்கு பாலியல் துஷ்பிரயோக விஷயத்தைப் பற்றி வெளிப்படையாக கலந்துரையாடுவதற்கான ஒரு சந்தர்ப்பம் முக்கியமானதாகும். பாலியல் துஷ்பிரயோகத்தைச் சூழ்ந்திருக்கும் மறைவடக்கப் பண்பு குற்றம்புரிந்தவர் தண்டனைகளிலிருந்து விலக்கீட்டுரிமையுடன் தப்பித்துக் கொள்வதற்கு ஓர் காரணியாக செயற்படுகின்றது.

குடும்ப மற்றும் குடிசார் மட்ட தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஏற்கனவே அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சமூக சேவை அலுவலர்கள் அத்துடன் சமூக சங்க நிறுவனங்களிடமிருந்து ஆதரவு தேவை. ஏனயவை NCPA இன் களம் சார்ந்த பணியாளர்கள், சிறுவர் உரிமைகள் அலுவலர்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தைப் பணியாளர்களை உள்ளடக்குகின்றன. இது வீடுகளுக்கு விஜயம் செய்யும் பொதுச் சுகாதாரப் பணியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், சமயத் தலைவர்கள் மற்றும் சமூக சங்க நிறுவனங்களைக் கூட உள்ளடக்கலாம்.

சகல பாடசலைகளிலும் உள்ள சகல சிறுவர்களுக்கும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான கலந்துரையாடலைத் தொடங்குவது மற்றும் அறிவை விரிவாக்குவதற்கு, சிறுவர் துஷ்பிரயோகம்

தொடர்பில் பாதுகாப்புக் கல்வி வழங்கப்பட வேண்டும். இந்த நோக்கத்திற்காக ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க வேண்டியிருக்கும். சிறுவர்களுடன் தடையேதுமின்றி உரையாடக் கூடிய திறன் மற்றும் தேவையான திறமைகளை கொண்டுள்ள குறித்த ஆசிரியர்களை அடையாளம் காண்பது அவசியமானதாக இருக்கும். நன்கு தெரிவுசெய்யப்பட்ட இணைநிலை கற்பிற்போர் பயிற்றப்பட்டால் முக்கியமானதொரு வளமாகவிருக்கும். பாதுகாப்புக் கல்வி வாழ்க்கைத் திறன்கள் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களினுள் கூட்டிணைக்கப்பட முடியும். பாடசாலைகள் மாறுபடுவதால் ஒவ்வொரு பாடசாலை நிலைமைகளையும் பொறுத்து பாடசாலைச் சுகாதார சேவைகளினுள் கூட இது உள்ளடக்கப்பட முடியும். சுகாதார பராமரிப்பு வழங்குனர்கள் சம்பந்தப்படுத்தப்படின் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மை உயர்வாக இருக்கும். சிறுவர் மற்றும் சிறுமியர் இருபாலாரினதும் துஷ்பிரயோகத் தடுப்புத் தொடர்பான பிரதான செய்திகளைத் தெரிவிப்பதனை உள்ளடக்குவதற்கு NCPA இனால் பாடசாலைகளில் ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு குழுக்கள் பலப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட வேண்டும்.

### வீடு மற்றும் சமுதாய மட்டத்தில் முதன்மைத் தலையீடுகள் - பதில்வினை

குடும்ப சுகாதாரத் தொழிலாளர்கள், சமூக சேவை அலுவலர்கள், மற்றும் NCPA ஒருங்கிணைப்பாளர்கள் வீடுகளுக்கு வருகைதரும் சமூக உளவியல் ஒருங்கிணைப்பாளர்கள் உட்பட, வெளிக்கள மட்ட அலுவலர்களின் பயனுள்ள ஒரு குழுவாக இருக்கின்ற அவர்களை, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தை முன்னதாகவே கண்டுபிடிப்பதற்கு ஒன்றுதிரட்டித் தயார்ப்படுத்தலாம்.
அவர்கள் பொருத்தமான சேவை வழங்குனர்கள், ஒன்றில் வைத்தியசாலை அல்லது சேவை வழங்குவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஓர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பரிந்துரைகளைப் பொறுப்பேற்க முடியும். அவர்கள் துஷ்பிரயோக இடர் அதி உயர்வாயிருக்கும் எளிதில் இலக்காகும் குடும்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறான குடும்பங்களை அடையாளம் காண்பதற்கு காட்டிகள் உருவாக்கப்பட வேண்டும். எளிதில் இலக்காகும் குடும்பங்களின் வரைபடம் ஒன்று தயாரிக்கப்பட்டால், அவர்கள் அவ்வாறான இல்லங்கள் மற்றும் குடும்பங்கள் மீது கவனம் செலுத்தலாம். சிறுவர்களுக்குப் பாரிய நன்மை பயப்பதாயிருக்கும் இந்தக் கடமையைச் செய்ய அவ்வாறான குழுக்கள் ஒன்றுதிரட்டப்பட்டால் பயிற்சி தேவையாயிருக்கும். பாலியல் துஷ்பிரயோக சிறுவர் பலியாட்கள் மிகப்பெரும்பாலும் மீண்டும் மீண்டும் மறைத்து வைப்பர் ஆகவே வெளி எட்டல் தலையீடு, அங்கு சேவைகள் அவர்களைச் சென்றடைவதால், பரிசீலிப்பது தகுதியானதாக இருக்கின்றது.

சமூகப் பணியாளர்கள் எளிதில் இலக்காகக் கூடிய குடும்பங்களைக்கண்டுபிப்பது மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் அத்துடன் பால்நிலை சார்ந்த வன்செயல் இரண்டினதும் சாத்தியமான நிகழுந்தன்மை தொடர்பில் ஓர் பயனுள்ள பாத்திரத்தை வகிக்க முடியும். சிறுவர் பாதுகாப்பை மேம்படுத்த சமூக சேவைகள் நிலையங்களைப் பயன்படுத்தல் பிறிதொரு தெரிவாகும். அவ்வாறான நிலையங்களை குடும்பங்களுக்கு குழந்தை வளர்ப்பு மற்றும் பாதுகாப்பு வகுப்புகளை வழங்குவதற்குப் பயன்படுத்த முடியும். அவ்வாறான திட்டங்களை ஆதரிக்கக்கூடிய தொண்டர்களுடனான அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் கூட இருக்க முடியும். பால்நிலை சார்ந்த வன்செயல் மற்றும் நெருங்கிய துணை மீதான வன்செயல் நிகழ்வில் கட்டாய தம்பதிகள் ஆலோசனைக்கான அணுகல் பரிசீலிப்பதற்குத் தகுதியானது.

சகல பாடசாலைகளுக்கும் ஓர் இரகசிய முறைப்பாட்டுப் பொறிமுறை தேவையாக உள்ளது, அது பிள்ளைகளுக்கு துஷ்பிரயோகம் பற்றி, அது இணைநிலையினரால், வயதுகூடிய சிறுவர்களால், அல்லது ஆசிரியர்களால் மற்றும் சில சந்தர்ப்பங்களில் அதிபரால் கூட குற்றம்புரியப்பட்டிருப்பின், அவை தொடர்பில் அறிவிப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகின்றது. இரகசியம்காக்குந் தன்மை ஓர் முக்கியமான தோற்றப்பாடு அது இல்லாவிட்டால் அவ்வாறான முறைமைகள் பயன் விளைவிக்காது. பெற்றோர்கள் கூட சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் பெற்றோர் ஆசிரியர்கள் சங்கம் மற்றும் ஒத்த நிறுவனங்கள் ஊடாகத் தகவல் வழங்க வேண்டும்.

### பாடசாலை சார்ந்த தலையீடுகள்

இலங்கையின் 90% மேலான சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதனால், பாதுகாப்புக் கல்வியை வழங்குவதற்கு இது ஒரு சிறந்த நுழைவுத் தானமாகும். இது தொடக்க வருடங்கள் மற்றும் குறிப்பாக இளமைப்பராயக் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட வேண்டியிருக்கின்றது. பாடசாலைகளும் கூட துஷ்பிரயோகத்தை அறிவிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும். இது ஆலோசனைச் சேவைகளுக்கான அணுகலுடன் உதவியளிக்கப்பட வேண்டும். பாலியல் துஷ்பிரயோக குற்றம்செய்வோர் இருக்கிறார்களாயின், சகல குற்றவாளிகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது ஆசிரியர்களுக்கு வயதுப் பொருத்தமான பாதுகாப்புக் கல்வியை வழங்குவதற்கு பயிற்சி வேண்டும். இது வாழ்கைத் திறன்கள் கல்வியின் பகுதியாக்கப்பட முடியும்.

பாடவிதானம் மற்றும் பாட நூல்கள் தொடர்பில் பால்நிலைத் தணிக்கை செய்வதற்கு கல்வித்துறை ஒரு முக்கிய பங்கினை ஆற்றவேண்டி இருக்கின்றது. மேலும், குறிப்பாக பால்நிலை சார்ந்த வன்செயல் தொடர்பாக, முரண்பாட்டுத் தீர்வில் வன்செயலற்ற முறைகளை உள்ளடக்குவது பயன்மிக்கதாய் இருக்கும். கல்வி அமைச்சுக் கூட பாடசாலைகளில் நிகழும் பாலியல் வன்செயல் பற்றித் தெரிவிக்க முறைப்பாட்டுப் பொறிமுறையொன்றைக் கொண்டிருக்க வேண்டும். சகல சந்தர்ப்பங்களிலும் தாமதமின்றி

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அறிவிக்கப்பட்ட தகவலின் திருத்தத்தை ஆராய்ந்து அறிவதற்கு ஒவ்வொரு முறைப்பாடும் விசாரிக்கப்படுவதுடன் குற்றம்புரிந்தவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இது தடுப்பிற்கு முக்கியமானதாக இருக்கின்றது ஏனெனில் அது குற்றம் செய்வோருக்கான ஓர் எச்சரிக்கை, சிறுவர்கள் தெரிவிப்பதற்கான தைரியமற்றிருந்தால் அவர்களில் பலர் தண்டனைகளிலிருந்து விலக்கீட்டுரிமை பெற்றுத் தப்பிக்கும் பாங்கு இருத்தல், சங்கடப்படுத்தப்படல் மற்றும் பழிவாங்கப்படும் பயம் அல்லது துஷ்பிரயோகம் அறிவிக்கப்படுவதால் செயற்பாடற்றிருத்தல்.

## அறிவித்தல் மற்றும் சட்ட அமலாக்கம்

சட்ட அமுலாக்க அதிகாரத்திற்கு பாலியல் துஷ்பிரயோகச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டவுடன், தாமதமின்றி பயனுறுதியுள்ள நடவடிக்கை எடுக்கப்படுவது அத்தியாவசியமாகும். ஏனையவை பலியாட்களின் உணர்வுநுட்பம் தொடர்பில் சிறிதும் மதிப்பின்றி அந்தரங்கம் தொடர்பாக ஊடக வெளிப்பாடு, பலியாள் பாதுகாப்பின்மை மற்றும் குற்றம்புரிந்தோர் பலியாள் மற்றும் குடும்பத்திற்கு குற்றச்சாட்டை மீளப்பெறுமாறு அச்சுறுத்தலை ஏற்படுத்தி பிணையில் செல்லுதலை உள்ளடக்குகிறது.

பெண்கள் மற்றும் சிறுவர்கள் பாதுகாப்பு காவல் துறைக் கருமபீடத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு கிரமமான பயிற்சி மற்றும் அவர்களது இடுபணிகளை நிறைவேற்றுவதற்கு ஆதரவு தேவையாகவுள்ளது. அதிகமான நன்கு பயிற்றப்பட்ட ஆண் பொலிசார் பெண்களுக்கு மேலதிகமாக ஊழியர்களாக இருப்பது அதிக ஆண் பிள்ளைகளைப் பாலியல் துஷ்பிரயோகம் பற்றித் தெரிவிப்பதற்கு ஊக்கப்படுத்துவதற்கு அத்தியாவசியமானதாய் இருக்கின்றது. சிறுவர் துஷ்பிரயோகம் குறைந்த ஆவணப்படுத்தல் மற்றும் ஆண் பிள்ளைகளின் பாலியல் துஷ்பிரயோகம் உட்பட காவற்றுறைப் பயிற்சிப் பாடவிதானத்தில் அதிகம் கோடிட்டுக் காட்டப்பட வேண்டியிருக்கின்றது. இது ஆண் பிள்ளைகளின் வணிகப் பாலியல் சுரண்டலைக் கூட உள்ளடக்க வேண்டும்.

## தரவுத் தளத்தை மேம்படுத்தல்

பெண் பிள்ளைகள் பற்றியனவற்றிற்கு மேலதிகமாக, ஆண் பிள்ளைகளின் பாலியல் துஷ்பிரயோகம் அறிவிக்கப்படுவதன் தரம் மற்றும் விஸ்த்தீரணம் மேம்படுத்தப்பட வேண்டியது முக்கியமானதாக இருக்கின்றது. சகல குழந்தைகளும் சமமாக உள்ளடக்கப்பட வேண்டும். தற்போது, அநேகமான தரவு பெண் பிள்ளைகள் மற்றும் பெண்கள் தொடர்பானது. ஆண் பிள்ளைகளிடமிருந்து தகவல்களைப் பெற பயிற்றப்பட்ட மற்றும் தகைமையுள்ள ஆண் நேர்காண்போர் அத்தியாவசியமாக இருக்கலாம். தற்போதைய NCPA மற்றும் பொலிசாரின் உடனடித் தொடர்பு இணைப்பு ஆண் பிள்ளைகளின் பாலியல் துஷ்பிரயோகத்திற்கான பதில்வினையின் அடிப்படையில் மீள்நோக்கப்பட வேண்டியிருக்கலாம். பெண்கள் மற்றும் சிறுவர்கள் காவற்றுறை கருமபீடங்கள், களத்தில், வைத்தியசாலைகளில், மற்றும் சுகாதார நிறுவனங்களில் உள்ள NCPA இணைப்பாளர்களுக்கான தகவல் வலுவூட்டப்பட்டு விரிவாக்கப்பட வேண்டும்.

ஆண்கள் பாடசாலைகளில், குறிப்பாக விடுதிப் பாடசலைகள், தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆண் மதகுருமார்களை மட்டும் கொண்ட சமய நிறுவனங்களில், இரகசியமானதும் பயனுறுதியானதுமான முறைப்பாட்டுப் பொறிமுறைகள் மிகவும் முக்கியமானது.

இந்தத் தரவுத் தளம் நீதித் துறையில் இருந்தான சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் நிலுவையிலுள்ள வழக்குகள் அத்துடன் ஆண் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தகவல்களை உள்ளடக்க வேண்டும்.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையை (NCPA) பலப்படுத்தல்

ஏற்கனவே NCPA சிறுவர் துஷ்பிரயோகத்தில் இருந்து சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பான கடமையை மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டிருப்பதனால் ஆண் பிள்ளைகளின் பாலியல் துஷ்பிரயோகத்தினைத் தடுப்பது மற்றும் பயனுறுதியான பதில்வினையாற்றல் இரண்டிற்கும் அதன் முயற்சிகளை விரிவாக்குவதற்கு அந்த நிறுவனம் வலுவூட்டப்பட்டு ஆதரவளிக்கப்படுவது அத்தியாவசியமான தாகும். இது அவ்வாறான துஷ்பிரயோகத்திற்கு எதிராகப் பரிந்துபேசுதல் மற்றும் குடும்பங்களை குறிப்பாகச் சிறுவர்களைஎட்டுவதற்கு ஊடகங்கள் அத்துடன் ஏனைய வடிவங்களையும் பயன்படுத்திசமூகத் தொடர்பாடலை மேற்கொள்ளல். பெண் பிள்ளைகளுக்கு மேலதிகமாக ஆண் பிள்ளைகளின் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய தெரிவிப்புகளுக்கு பதிற்செயலாற்றும்அவர்களின் முறைமையை மேம்படுத்துவது அவசியமானதாகும். NCPA இன் ஒருங்கிணைப்பாளர் தொகுதி ஊடாக அவ்வாறான தெரிவிப்புகளுக்கு மாவட்டங்களில் உள்ள சந்தர்ப்பங்கள் விரிவாக்கப்பட வேண்டும். கல்வி அத்துடன் சிறுவர் பாலியல் பலியாட்களுக்கு சேவைகளை வழங்குவதிலும் சமூக உளவியல்சார் ஒருங்கிணைப்பாளர்கள் ஓர் முக்கிய பாத்திரத்தை வகிக்க முடியும். இரண்டு குழுக்களும் மாவட்டம் மற்றும் பிரதேச பிரிவு உள்ளூர் மட்டத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை விரிவாக்க முடியும் என்பதுடன் விரிவாக்க வேண்டும்.

பலியாட்களுக்குச் சிகிச்சை மற்றும் ஆலோசனை தொடர்பான சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை விரிவாக்குவதில் NCPA ஓர் தலைமைப் பங்கினைக் கூட எடுக்க முடியும். அவ்வாறான சேவைகளை வழங்குவதில் NCAP சமூகஉளவியல்சார் ஒருங்கிணைப்பாளர்கள் ஓர் கணிசமானளவு பங்கினை ஆற்ற முடியும். இது குழந்தைகளுக்கு சேவைகளை விநியோகிப்பதில் உதவுவதற்கு அர்பணிக்கப்பட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக சங்க உறுப்பினர்கள் பயிற்சியை உள்ளடக்க வேண்டும். NCPA ஊடகங்களில் ஆண் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோக விடயத்தைச் சுட்டிக்காட்டல் மற்றும் பிரச்சினை பற்றி சிறந்த அங்கீகாரத்தை மேம்படுத்தலில் கூடத் தலைமைத்துவம் வழங்க முடியும். NCPA உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் பயன்படுத்துவதற்கு, ஆண் பிள்ளைகளின் பாலியல் துஷ்பிரயோகத்தின் மீது குவியப்படுத்தப்பட்ட, ஊடகத் திரவியங்களைக் கூட வழங்க முடியும். ஆண் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோக விடயம் தொடர்பில் ஓர் பிரத்தியேக ஊடகப் பிரச்சாரம் விடயத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவது பயனுள்ளதாய் இருக்கும்.

### சிறுவர் பாலியல் துஷ்பிரயோக பலியாட்களுக்கான காப்பு உட்பட சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தைத் திணைக்களத்தின் சேவைகளின் தரத்தை மேம்படுத்தல்

மாகாண மட்டத்தில், சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தைத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படுகின்றகாப்பு நிறுவனங்களில் கைவிடப்பட்ட குழந்தைகள், அநாதைகள், புறக்கணிப்பு மற்றும் துஷ்பிரயோக குழந்தைப் பலியாட்களுக்காக வழங்கப்படுகின்ற பலியாட் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புச் சேவைகளின் தரம் மற்றும் விஸ்த்தீரணத்தை மேம்படுத்த வேண்டியதொரு தேவை இருக்கின்றது. இது சகல குழந்தைப் பாலியல் துஷ்பிரயோக பலியாட்களுக்கு ஆலோசனை மற்றும் சிகிச்சைக்கான அணுகலை வழங்குவதனை உள்ளடக்குகின்றது. அவ்வாறான ஸ்தாபனங்களில் பணியாற்றும் சகல ஊழியர்களுக்கும் நன்கு தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு வரன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகத்தைக் கண்டுபிடித்துப் பதிற்செயலாற்றும் முறைகளை உள்ளடக்கிய அடிப்படைப் பயிற்சி ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். இது நிறுவகத்தினுள்ளும் கூட துஷ்பிரயோகம் தடுக்கப்படுதலினை உள்ளடக்குகின்றது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக சமுதாய நிறுவனங்கள் கூட துஷ்பிரயோகம், புறக்கணிப்பு, மற்றும் சுரண்டற் பாதிப்புக்குள்ளான குழந்தைப் பலியாட்களுக்கு புகலிடம் வழங்குகின்றன. அவ்வாறான சகல நிறுவனங்களும் மாகாண மட்டத்தில் பதிவுசெய்யப்படுவதுடன், பாதுகாப்பு மற்றும் பராமரிப்புத் தரங்களை மேம்படுத்துவது தொடர்பிலான செந்தரங்களுக்கு அநுசரித்துப் போதல் அடிப்படையில் கிரமமாகக் கண்காணிக்கப்பட வேண்டும். சகல நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு அலுவலர்களும் ஆண் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்தின் புதிய பரிமாணங்களைப்பற்றி அறிந்திருக்க வேண்டிய தேவையுள்ளது, அவ்வாறு அவர்களும் கூட பிரச்சினை தொடர்பில் மேலும் விழிப்பாக இருப்பதுடன் அதற்கிணங்க பதிற்செயலாற்ற முடியும். இந்தத் தோற்றப்பாடு தொடர்பில் பயிற்சி தேவைப்படலாம்.

நன்னடத்தை அலுவலர்களும் கூட அரசாலும் அத்துடன் வேறு குழுக்களாலும் நடாத்தப்படும் நிறுவனங்களில் நிகழும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் விழிப்பாய் இருப்பது முக்கியமானதாக இருக்கின்றது. சில அரசசார்பற்ற நிறுவனமாகப் பதிவு செய்யப்படாதிருப்பதுடன் வேண்டப்படும் செந்தரங்களை அநுசரிக்காது இருக்கலாம். சகல நிறுவனங்களிலும் ஓர் கண்டிப்பான வழிகாட்டற் தொகுதி மற்றும் செந்தரங்கள் பராமரிக்கப்பட வேண்டும், மற்றும் எந்தத் துஷ்பிரயோகமும், குறிப்பாக பாலியல் துஷ்பிரயோகம், நிகழாதவாறு ஓர் தனியான கண்காணிப்பு முறைமை ஏற்படுத்தப்பட்ட வேண்டும். அவ்வாறான சகல நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கும் இரகசியமான அறிவிக்கும் முறைமை ஒன்றிற்கான அணுகல் தேவையாகும்.

### ஆராய்ச்சி

ஆண் சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகதிற்கான காரணங்கள், பால்நிலை சார்ந்த வன்செயலுடனான தொடர்பு மற்றும் பெண்களுக்கு எதிரான வன்செயலின் ஏனைய வடிவங்களைத் தீர்மானிப்பதற்கு இன்னுங் கூடுதலான ஆராய்ச்சி தேவைப்படலாம். இதற்கு குற்றம்புரிபவர் அத்துடன் பலியாட்களிடம் இருந்து விபரமான தகவல்கள், பயிற்றப்பட்ட பேட்டிகாண்பவர்கள் மற்றும் குடித்தொகையின் ஓர் பிரதிநிதித்துவ மாதிரி எனபன தேவைப்படலாம்.

இதற்கு மாவட்டங்கள் மற்றும் பிரதேச மட்டங்களிலிருந்த கூட குறிப்பாக எழிதில் இலக்காகக்கூடிய பிரதேசங்கள் மற்றும் சமுதாயங்களை அடையாளம் காண்பதற்கு இன்னுங் கூடுதலான தகவல் மற்றும் தரவு திரட்டப்படலும் உள்ளடக்கப்பட வேண்டியிருக்கும். சொற்ப அளவிலான தகவல்களே உள்ள ஏனைய பரப்புகள், ஆண்கள் பாடசாலை குறிப்பாக உண்டுறையும் விடுதிப் பாடசாலைகள், கல்விநிறுவனங்கள், தொழில்சார் பயிற்சி நிறுவனங்கள், இளையோர் தடுப்புக்காவல் மையங்கள், பயிற்சிக் கல்லூரிகள், ஆண் சிறுவர்களை அனுபவமற்றவர்களாக சேர்த்துக் கொண்டிருக்கும் சமய நிறுவனங்கள் ஆகியனவற்றை உள்ளடக்குகின்றன. இவைகள் இன்னுங் கூடுதலான தகவல் திரட்டுவதற்கு மற்றும் இன்னுங் கூடுதலான ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுவதற்கான சகல பரப்புகளாகும். தகவலின் உணர்நுட்பத் தன்மை மற்றும் சிறுவர்கள் சம்பந்தப்பட்டிருப்பமை காரணமாக, ஆராய்ச்சியாளர்கள் நன்கு தெரிவுசெய்யப்பட்டு பயிற்றப்பட வேண்டும்.

இலங்கை குழந்தை நல மருத்துவர்கள் கல்லூரி ஏற்கனவே சம்பந்தப்பட்டிருப்பதுடன் ஆராய்ச்சி அத்துடன் தலையீடு இரண்டிற்கும் உதவுகின்றது. நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படுவதுடன் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட வரையில் ஓர் தலைமைப் பாத்திரத்தினை வகிக்க முடியும்.

### பொருள் துஷ்பிரயோகத் தடுப்பு

பால்நிலை சார்ந்த வன்செயலிற்கு பங்களிப்புச் செய்யும் இது ஒரு முக்கிய காரணியாக இருப்பதுடன் சிறுவர்களின் புறக்கணிப்புத் துஷ்பிரயோகத்திற்கும் பங்களிப்புச் செய்ய முடியும். நடைமுறைத் தலையீடுகள் விரிவாக்கப்படுவது அத்தியாவசியமாக இருக்கின்றது. சிறுவர்களை மதுபானம், போதைப்பொருள் மற்றும் புகையிலை பழக்கத்திற்கு அடிமையாவதைத் தடுப்பதற்கு சிறுவர்களுக்கு பாடசாலைகளில் வாழ்க்கைத்திறன் கல்வி அத்துடன் இணைநிலைக் கற்பிப்போர் நிகழ்ச்சிகளை வழங்குவதற்கு முயற்சிகள் தேவைப்படுகின்றன. அவ்வாறான பழக்கங்களை வயதுவந்தவர் வாழ்வில் மாற்றுவது மிகவும் கடினமானதுடன் விரும்பத்தக்க பயனையும் விளைவிக்காது. ஆகையால் பாடசலைகளுக்கான அவ்வாறான நிகழ்ச்சிகள், குறிப்பாக வயதுவந்தவர்கள் மற்றும் இளைஞர்கள் முக்கியமானதாக இருக்கின்றன. இது மதுபான விளம்பரங்கள் தொடர்பில் ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதனையும் உள்ளடக்குகின்றது.

#### ஊடகம்

ஊடகங்களில் வன்செயல், குறிப்பாக இலத்திரனியல் ஊடகங்கள் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மீது கணிசமான தாக்கமொன்றைக் கொண்டிருக்கலாம். இது குறிப்பாக ஆண்மைக்குரிய மாதிரியைச் சித்தரித்தலுடன் தொடர்புபடுகின்றது அது பெரும்பாலும் ஆண் நடத்தை வன்செயலை அடிப்படையாகக் கொண்டதாக ஏற்றுக்கொள்வதாக இருக்கின்றது.

ஊடகம் பொதுமக்களின் ஒரு பரந்த பிரிவினரைச் சென்றடையக்கூடிய அநுகூலத்தைக் கொண்டிருக்கின்றது. எவ்வாறாயினும், பால்நிலை சார்ந்த வன்செயல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விழுமியங்களின் சூழமைவில் ஊடகம் ஓர் தீர்க்கமான அல்லது எதிர்மாறான பங்கினை வகிக்க முடியும். இவை மேலும் பரந்த அளவில் அங்கீகரிக்கப்பட வேண்டும். 24 தொலைக்காட்சி நிலையங்களும், 43 வானொலி அலைவரிசைகள், மற்றும் 18 கம்பிவட தொலைக்காட்சி வலையமைப்புகள் இருப்பதனால் பொதுமக்களின் ஆண்கள், பெண்கள், மற்றும் குழந்தைகளை உட்பட ஒரு பரந்த பிரிவினர் இருப்பதுடன் அவர்கள் பொழுதுபோக்கின் ஓர் வடிவமாக நீண்ட நேரத்திற்கு தொலைக்காட்சி பார்க்கின்றனர் மற்றும் வானொலி கேட்கின்றனர். ஆகவே குழந்தைகள் மற்றும் பால்நிலை சார்ந்த வன்செயல் சம்பந்தப்பட்ட வரையில் குறித்த நீதிநெறிக்குரிய நடைமுறைகளை ஏற்படுத்துவது முக்கியமானதாக இருக்கின்றது. அது குழந்தைப் பாதுகாப்புப் பற்றிய சரியான செய்தி தெரிவிக்கப்பட்டால் அது அதுவாகவே ஒரு அநுகூலமான ஊடகப் பிரச்சாரமாக அமையும். வன்செயல் கண்காணிப்பதற்கு ஒரு நெறிமுறைக் கோவை ஏற்படுத்தப்பட வேண்டும் அத்துடன் ஒரு முறைப்பாட்டுப் பொறிமுறையும். இது இணையத்தையும் உள்ளடக்க வேண்டும். ஓர் மின்வெளி கடுங்கண்காணிப்பு முறைமை சிறுவர்களை குழந்தைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு சிறுவர்களை அணுகிக் கேட்கும் வயதுவந்தவர்களை கண்டுபிடித்துத் தடுப்பதற்கு முக்கியமானதாக இருக்கின்றது.

தொலைக்காட்சி நாடகங்கள் மிதமிஞ்சிய அளவு பால்நிலை சார்ந்த வன்செயலைச் சித்தரிப்பதில் பிரபல்யமாக இருக்கின்றன, அது வீடுகளில் "சாதாரண" ஆண் நடத்தையாக தீட்டிக்காட்டப்படுகின்றது. இவைகள் சிறுவர்களால் ஆரம்ப வயதுகளில் இருந்தே மீண்டும் மீண்டும் பார்க்கப்படுகின்றன. அந்தத் தொலைக்காட்சி நாடகங்களுக்கு வசனம் எழுதும் எழுத்தாளர்கள் அத்தகைய மனப்பான்மையை சமூகத்தில் மீள்வலியுறுத்துவதனால் உருவாக்கப்படும் கெடுதியை விளங்கிக்கொள்வதற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டும்.

உண்மைக் காட்சிகளில் சிறுவர்கள், குறிப்பாகப் பெண் பிள்ளைகள், பால்நிலைக் கவர்ச்சியை வெளிக்காட்டும் பாணியில் உடையணிந்து நடந்துகொள்வது போன்ற சுரண்டல்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் கூட முக்கியமானதாகும். அவ்வாறான நிகழ்ச்சிகள் சிறுவர் துஷ்பிரயோகக் குற்றம்புரியும் உள்ளாற்றல் உள்ளவர்களை ஊக்கமூட்ட முடியும்.

உண்மைக் காட்சிகளில் குறிப்பாக "பாலியற்படுத்தப்பட்ட" பாணியில் சிறுவர்களைப் பயன்படுத்தும் விளம்பரங்களைத் தடுத்தல் மற்றும் கண்காணிப்பதில் தனியார்த்துறை ஓர் பங்கினை வகிக்க முடியும்.

### திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு

குவியத் தான அமைச்சு, அதாவது சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகாரங்கள் அமைச்சு, பால்நிலை சார்ந்த வன்செயல் அத்துடன் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பனவற்றிற்குப் பதிற்செயலாற்றுவது தொடர்பாக தலையீடுகளைத் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தலில் தலைமையேற்க வேண்டும். நீதி, பாதுகாப்பு, கல்வி, சமூக சேவைகள், ஊடக, மாகாண நிர்வாகம் போன்ற ஏனைய முதன்மை அமைச்சுக்கள் மற்றும் நன்கொடை முகவரகங்கள் மற்றும் சமூக சங்க நிறுவனங்களின்

ஆதரவு முக்கியமானதாக இருக்கின்றது. ஓர் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் ஓர் கண்காணிப்புப் பொறிமுறை தயாரிக்கப்படல் உட்பட ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டியிருக்கின்றது.

### கூட்டணிகளைக் அமைத்தல்

சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகத்தை இல்லாதொழிப்பதற்கு ஓர் பரந்த துலங்கல், குறிப்பாக ஆண் சிறுவர்கள் தொடர்பில் சமூகத்தின் சகல மட்டங்களிலும் முக்கியமானதாக இருக்கின்றது. இது பல்வேறு மட்டங்களில் பல்- துறை கூட்டணிகள் மீது அமைக்கப்பட வேண்டும். இவை குடும்பங்களை உள்ளடக்கி சமுதாய மட்டம், கிராம அலுவலர், பிரதேச மற்றும் மாவட்ட அத்துடன் மாகாண மட்டங்களை உள்ளடக்குகின்றது. இவை எல்லாம் தேசிய மட்ட நிறுவனங்களுடன் கூட்டிணைவாக்கப்பட வேண்டும், குறிப்பாக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு. இந்தக் கூட்டணிகளுக்கு அரசியல், மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக விஷயங்கள் தொடர்பில் பணியாற்றும் சமூக சங்க நிறுவனங்களினதும் ஆதரவு தேவை. இலங்கை குழந்தைநல மருத்துவர்கள் கல்லூரி மற்றும் இலங்கை தடயவியல் நோய்க்குறியாய்வு வல்லுனர் கல்லூரி போன்ற தொழில்சார் அமைப்புக்களின் ஆதரவு அத்தியாவசியமானது.

ஊடகத்தில் தெளிவான கொள்கை அறிக்கை, அரசியல் தலைமைகளினால் இந்த விடயம் தொடர்பில் ஒழுங்கான செய்தியாளர் கூட்டங்கள், தொழில்சார் நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், சமூக சங்க நிறுவனங்கள் மற்றும் கல்விசார் நிறுவனங்கள் சகலமும் நேரிய தாக்கம் ஒன்றை இயலச்செய்வதற்கு பங்களிப்புச் செய்யலாம்.

## இணைப்பு அ

# பரிந்துரைக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம்

| இல | குவியப் பரப்பு | இலக்குகள் குறிக்கோள்கள் | பிரைச்சனைகள் | செயற்பாடுகள் | பிரதான பொறுப்புக்கள் | செயற்றிறன் குறிகாட்டிகள் | நேரக் கட்டமைப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | தரவுத் தளத்தை மேம்படுத்தல் | சிறுவர் துஷ்பிரயோகம் மீதான தரவுத் தளத்தினது தரம் மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்தல், சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான தகவல் தொகுப்பை விரிவாக்கல்.<br><br>NCPA, மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் காவற்றுறைக் கருமபீடம், நன்னடத்தை மற்றும் சிறுவர் காப்பகம் அத்துடன் இடரிலுள்ள சிறுவர்களுக்குச் சேவைகளை வழங்கும் குடிசார் சமுதாய நிறுவனங்கள், நீதி மன்றம் மற்றும் குழந்தைநல அலகுகளில் இருந்தான தகவல்கள் அறிவிக்கப் படுவதனை வலுவூட்டல் | தரவுத் தளம் ஆண் பெண் இரு பாலரதும் பாலியல் துஷ்ப்-பிரயோங்கள் மற்றும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சேவைகள் வழங்கும் சகல நிறுவனங்களையும் உள்ளக்கி பரந்ததாக இருக்க வேண்டும். | தரவு திரட்டும் சகல பொருத்தமான நிறுவனங்களுடன் இணைந்து சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளல்.<br><br>சகல பொருத்தமான குவியத் தான நிறுவனத்தில் இருந்து தரவு திரட்டல் மற்றும் ஒருங்கு இணைப்பிற்கு குவியத் தானம் ஒன்றை இனங்காணல் | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு<br><br>ஊதவி நிறுவனங்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் காவற்றுறை அலுவலகம்,NCPA ,நீதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம், இலங்கை குழந்தைநல மருத்துவர்கள் கல்லூரி,குழந்தைகளுக்கானசேவைகளை வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களை உள்ளடக்குகின்றன. | பொருத்தமான நிறுவனங்களுடன் நடாத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை மற்றும் தரவுத் தளத் தயாரிப்பு<br><br>தயாரிக்கப் பட்ட ஒருங்கிணைக் கப்பட்ட விசாலமான தரவுத் தொகுதிகளின் எண்ணிக்கை | 2 வருட-ங்கள் |
| 02 | குடும்ப மட்டத்தில் முதன்மைத் தலையீடுகள், ஒருங்கிணைக் கப்பட்ட பதில்வினை ஊடாக சிறுவர் துஷ்பிரயோகத்தைத தடுத்தல் | 'இடரில் உள்ள' குடும்பங்களை கிராம சேவை மற்றும் அல்லது பிரதேச மட்டத்தில் சிறுவர் உரிமைகள் அலுவலர்கள் மற்றும் ஏனைய பிரதேச மட்ட அலுவலர்களின் உதவியுடன் அடையாளம் காணல்.<br><br>வீடுகளுக்கு விஜயம் செய்யும் சகல களப் பணியாளருக்கும் சிறுவர் பாலியல் துஷ் பிரயோகங்களை அடையாளம் காண பயிற்சி வழங்கல்.<br><br>சேவைகள் அணுகல் தொடர்பில் தகவல் வழங்கல். | சிறுவர் பாலியல் துஷ் பிரயோகம் பெண், ஆண் பிள்ளைகள் இரு பாலாரையும் சம்பந்தப் படுத்தி, அநேகமான சம்பவங்களில் குழந்தைக்குத் தெரிந்தவரால், வீட்டில் மற்றும் குடும்பங்களில் நிகழ்கின்றது.<br><br>ஆண் சிறுவர்கள் தொடர்பான உன்னத அறிக்கை இடலினைப் பெற்றுக் கொள்ளும் அழுத்தத்துடன் சிறுவர் பாலியல் துஷ் பிரயோகம்.<br><br>சிறுவர் துஷ் பிரயோகத்தில் இருந்து குழந்தைகளை பாதுகாப்பது | பிரதேசம் சார்ந்த இல்ல மட்ட தலையீடுகளுக்கு ஓர் மாவட்டம், பிரதேச பிரிவுகள் மற்றும் அல்லது கிராம அலுவலர் பிரிவுகளின் தெரிவு.<br><br>எளிதில் இலக்காகும் குடும்பங்கள் தொடர்பில் ஒப்புநோக்குத் தகவல் திரட்டல்.<br><br>விநியோகிக் கப்படுவதற்கு உள்ளூர் மொழிகளில் சிறுவர் துஷ் பிரயோகம் தொடர்பாக பொருத்தமான திரவியங்களை தயாரித்தல்.<br><br>ஆதரவு வழங்க ஆர்வமாய் உள்ள குடிசார் சமுதாய நிறுவனங்களை அடையாளம் | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு<br><br>மாகாண மற்றும் மாவட்ட நிர்வாகம்<br><br>உள்ளூர் அரசியல் தலைமை<br><br>சுகாதாரத் துறை ஊழியர், குறிப்பாக களப் பணியாளர்கள். குடும்ப சுகாரதார வேலையாட்கள் குழந்தைநல மருத்துவர்கள்,MOOH NCPAஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் சமூக உளவியல் ஒருங்கிணைப் பாளர்கள்.<br><br>சமூக சேவைகள் அலுவலர்கள். | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்கள் பிரதேச பிரிவுகள் கிராம சேவையாளர் பிரிவுகளின் எண்ணிக்கை.<br><br>தெரிவு செய்யப்பட்ட மிகவும் எழிதில் இலக்காகும் குடும்பங்கள் தொடர்பான ஒப்பு நோக்குத் தரவு கிடைக்கக் கூடியதாய் இருத்தல்.<br><br>நடாத்தப்பட்ட பரிந்து பேசும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை.<br><br>தயாரிக் கப்பட்ட விழிப்புணர்வு திரவியங்களின் தரம்.<br><br>செயற்படு நிலையிலுள்ள குடிசார் சமுதாய சார்பு நிறுவனங்கள் | 2 - 3 வருடங்கள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | தொடர்பிலான அழுத்தத்துடன் குழந்தை வளர்ப்புக் கல்வியை மேம்படுத்துதல். | காணல்.<br><br>உள்ளூர் அரசியல் தலைமைகள் சமயத் தலைமைகளின் ஆதரவை ஒன்று திரட்டல்.<br><br>நிகழ்ச்சித்திட்ட செயற் படுத்தலில் சம்பந்தப் பட்ட சகல குழுக் களுக்காக கற்றற் திரவியங்களை தயாரித்தல். | சிறுவர் உரிமைகள் அலுவலர்கள்.<br><br>நன்ன் சிறுவர் ஊழியர்கள்டத்தை த மற்றும் | வலைமைப்பு எண்ணிக்கை மற்றும் ஏற்படுத் தப்பட்ட பொருத்தமான அரச அலுவல கங்கள். தொடர்பு கொள்ளப்பட்ட குடும்பங்கள் | |
| 03 | சிறுவர் துஷ் பிரயோக சம்பவங்கை ள சட்ட அமுலாக்க அதிகார சபைகளுக்கு தெரிவித்தல் | சிறுவர்களின் (பையன்கள்) பாலியல் துஷ் பிரயோகம் பற்றி அறிவித்தலை உற்சாகப்படுத்தி மேம்படுத்துவதில் விசேட அழுத்தத்துடன் சிறுவர் துஷ் பிரயோக அறிக்கை இடலை மேம்படுத்துதல். | சிறுமிகளுக்கு மேலதிகமாக, சிறுவர் பாலியல் துஷ் பிரயோகத்தை கண்டுபிடித்து அறிவிக்க குடும்பங்கள் சமுதாயங்கள் மற்றும் பொதுசனம் மீது முன்னுரிமை வைக்கப்படல்.<br><br>துஷ் பிரயோகம் பற்றித் தெரிவிக்க ஆண் சிறுவர்களை ஊக்கப் படுத்துவதற்கு நடவடிக்கை-களை தீர்மானித்தல்.<br><br>அவ்வாறான முறைப்பாட-களை கையாழ்வதில் சம்பந்தப்பட்-டுள்ள ஊழியர்களின் பயிற்சி.<br><br>ஊடக உதவி.<br><br>நீதி மன்ற வழக்குகளை துரிதப்படுத்தல் சட்டமா அதிபர் திணைக்களம் நீதி அமைச்சு | பெண்கள் மற்றும் குழந்தைகள் காவல் துறை கரும பீடத்தில் பொலிசாரின் பயிற்சி மற்றும் சிறுவர்களின் பாலியல் துஷ் பிரயோகம் மீதான தகவல் பற்றி மதிப்பிடல்.<br><br>பண்புத் தர தோற்றப் பாடுகளை மேம்படுத்த அடிப்படைப் பொலிஸ் பயிற்சிக்கு பொருத்தமான உள்ளீடுகள்.<br><br>சிறுவர்கள் (பையன்கள்) மீதான பாலியல் துஷ் பிரயோகம் மீது விசேட அழுத்தத்துடன் சகல NCPA ஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் சமூக உளவியல் ஒருங்கிணைப் பாளர்களுக்கு பயிற்சிகள்.<br><br>பல்லூடக மூலோபாயம் ஒன்றைத் திட்டமிடல் மற்றும் அமுல் படுத்தல்.<br><br>நீதி மன்ற வழக்குகள் துரிதப்படுத்தப் படுவதனை வலுவூட்டல். | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு<br><br>நீதி அமைச்சு<br><br>சட்டமா அதிபர் திணைக்களம்<br><br>காவல் துறை பெண்கள் மற்றும் குழந்தைகள் கரும பீடம். | பொலிசார் மற்றும் NCPA ஒருங்கிணைப் பாளர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை. | 2 - 3 வருடங்க ள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 04 | சிறுமிகளுக்கு மேலதிகமாக சிறுவர்களின் பாலியல் துஷ் பிரயோகம் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக் கையை மேம்படுத்துவ தற்கு, இலக்கு வைக்கப்பட்ட கருத்திடப் பிரதேசத்தில் அறிவித்தல் மற்றும் பதில்வினை உட்பட பயனுறுதியா ன தடுப்பு மற்றும் பதில் வினைக்கு NCPA இன் வெளி எட்டல் ஊழியர்களி ன் பாத்திரத்தை விரிவாக்கல் | NCPAஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் சமூக உளவியல் ஒருங்கிணைப் பாளர்களின் அறிவு மற்றும் திறனை மேம்படுத்தல்.<br><br>பயனுறுதியாக பதில் வினையாற்று வதற்கு அவர்களை இயலச் செய்வதற்கு திறமைகளை வழங்குதல்.<br><br>கள மட்டத்தில் அவர்கள் பகிரக் கூடிய கல்வி உபகரணங்கள் வழங்குதல்.<br><br>அவர்களது பணிச் செயற்பாட்டை நிறைவு செய்வதற்கு அவர்களின் திறன்களை மேம்படுத்த தேவையான உள்ளீடுகளை வழங்குதல். | பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், சமூக பணி நிலையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களில் மற்றும் குடிசார் சமூகக் குழுக்களால் அடையப்படாத தகவலுக்கான தேவை.<br><br>எளிதில் இலக்காகக் கூடிய குடும்பங்கள் இடையே அறிவு இன்மை.<br><br>சிறுவர் துஷ் பிரயோகம், குறிப்பாக பையன்கள், தொடர்பில் ஆசிரியர்கள் மற்றும் பாடசலைகள் இடையே அறிவு இன்மை.<br><br>குழந்தை பலியாட்களுக் கு சிகிச்சை ஆலோசனை களுக்கான அணுகல் இன்மை.<br><br>குற்றம் புரிந்தோரைத் தெரிவிப்பதற்கு பலியாட்கள் மற்றும் குடும்பங்களுக் கு உதவி.<br><br>சகல பாடசாலை களிலும் சிறுவர் பாதுகாப்பு குழுக்களின் தேவை.<br><br>பெண்கள் மற்றும் சிறுவர்கள் காவல் துறை கரும பீடத்திற்கான அணுகலுக்கு வசதியளித்தல். | அவர்களின் திறமைகள் மற்றும் அறிவினை மேம்படுத்தல் பயிற்சி.<br><br>கற்பித்தற் திரவியங்களை வழங்குதல்.<br><br>அவர்களின் வெளி எட்டல் பணிகள் தொடர்பான தடைகளை வெல்லுதல்.<br><br>உள்ளுர் குழந்தைநல அலகு மருத்துவ அலுவலர் உளநல சுகாதாரம் என்பன வற்றுடன் துணைத் தொகுதி ஒன்றை அமைத்தல்.<br><br>தேசிய மட்டத்தில் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு காலாண்டு விடயங்களைத் தெரிவிப்பதற்கு சந்தர்ப்பங் களை வழங்குதல்<br><br>சகல பாடசாலை களிலும் சிறுவர் பாதுகாப்பு குழுக்களை அமைக்க நடவடிக்கை எடுத்தல் | NCPA | சகல பொருத்தமான ஊழியர்களை உள்ளடக்கி எந்த பயிற்சி நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட வில்லை<br><br>வழங்கப்பட்ட மற்றும் பயன் படுத்தப்பட்ட கற்பித்தல் திரவியங்களின் தரம்.<br><br>ஒவ்வொரு மாவட்டங் களினுள்ளும் கருத்திட்டப் பிரதேசங்களில் ஏற்படுத்தப் பட்ட உதவி மற்றும் பரிந்துரைத் தொகுதிகளின் எண்ணிக்கை<br><br>கருத்திட்டப் பிரதேசங்களில் சகல பாடசாலை களில் ஏற் படுத்தப்பட்ட சிறுவர் பாதுகாப்பு குழுக்களின் எண்ணிக்கை.<br><br>நடாத்தப்பட்ட காலண்டுக் கூட்டங்களின் எண்ணிக்கைNCP A இல் மத்திய மட்டத்தில் தீர்க்கப்பட்ட பிரச்சினைகள். | 2 வருட-ங்கள் |
| 05 | பாடசலை சார்ந்த தலையீடுகள் | பாடசாலைகளில், ஆண் பெண் பிள்ளைகள் உட்பட,சிறுவர் பாலியல் துஷ் பிரயோகத்திற்கு பதிற் செயலாற்றல் மற்றும் தடுத்தல். | சிறுவர்களுக்கு ப் சிறுவர் பாலியல் துஷ் பிரயோகம் பற்றிய விழிப்புணர்வு இல்லை மற்றும் எவ்வாறு அத்தகைய துஷ் பிரயேகத்தைத் தடுப்பது பற்றிய அறிவும் இல்லை. இது ஆண் பெண் பிள்ளைகள் இருபாலாரையு ம் உள்ளடக் | பாலியல் துஷ் பிரயோகத்தின் பல சிறுவர் பலியாட்கள் தரமான சிகிச்சை ஆலோசனை களுக்கான அணுகலைக் கொண்டிருக்க வில்லை. பெற்றோருக்கு மற்றும் குடும்பத்திர்க்கு எவ்வாறு அவர்கள் சிறுவர் பலியாளுக்கு உதவுவது என்பது பற்றி போதிய உதவி இல்லை. | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு<br><br>NCPA<br><br>மனநோய் மற்றும் உளவியற் துறை, கொழும்புப் பல்கலைக் கழகம்<br><br>கல்வி அமைச்சு<br><br>குடும்ப சுகாதார அலுவலகம் சுகாதார அமைச்சு | சிறுவர் பாலியல் துஷ் பிரயோகம் தொடர்பில் சகல பாடசாலை களையும் உள்ளடக்கிய இரகசியமான அறிவித்தல் முறைமை.<br><br>சிறுவர்களுக்கு பாதுகாப்பு கல்வி வழங்கும் பாடசாலைகள் எண்ணிக்கை பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் எண்ணிக்கை | 2 வருட-ங்கள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | குகின்றது.<br><br>அவ்வாறான துஷ் பிரயோகத்தை அறிவிப்பதற்கு பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு இரகசியமான, அணுகக்கூடிய "சிறுவர் சிநேகபூர்வமான" முறைமை இல்லை.<br><br>பாலியல் துஷ் பிரயோகத்தை மறைக்கும் பாங்கு காணப்படுகின்றது, மற்றும் அந்த செயல்முறையில், குற்றம்புரிந்தோர் தண்டணையில் இருந்து விலக்குப் பெற்றுத் தப்பித்துக் கொள்கின்றனர்.<br><br>ஆண் சிறுவர்கள் பாலியல் துஷ் பிரயோகத்தை சூழவுள்ள இரகசியத் தன்மை இல்லா தொழிக்கப்பட வேண்டும்.<br><br>துஷ் பிரயோகம் செய்பவர் ஓர் இணைநிலையினர், ஓர் வயதுகூடிய சிறுவன், ஓர் ஆசிரியர் அல்லது ஓர் அதிபராகக் கூட இருக்கலாம்.<br><br>பாடசாலையில் சிறுவர்களின் பாதுகாப்பு அவ்வாறான சிறுவர்கள் மிகவும் எளிதில் இலக்காகக் கூடிய நிலமைகளை வெல்வதாக இருக்க வேண்டும். | | | சிறுவர் களுக்கான கல்வி திரவியங்கள் வழங்கப்பட்ட வஸ்தீரணம்<br><br>சிறுவர் பாலியல் துஷ் பிரயோகத்தை தடுத்தல் மற்றும் பதிற் செயலாற்றல் இனது முக்கியத்துவம் தொடர்பில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர் களுக்கான ஆற்றுப் படுத்தல் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை. | |
| 06 | ஆண் பெண் இருபாலாரும் - சகல பாலியல் துஷ் பிரயோக பலியாட்கட்கு சேவை களுக்கான அணுகல் | சிறுவர் பலியாட்கட்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் அவர்கள் சகஜ நிலையை மீளப் பெற இரகரிய ஆலோசனை சிகிச்சை மற்றும் ஏனைய சேவைகளின் தரம் மற்றும் அணுகலை மேம்படுத்தல் மற்றும் விரிவாக்கல் | பல பாலியல் சிறுவர் பலியாட்கள் தரமான சிகிச்சை மற்றும் ஆலோசனை களைப் பெறுவதில்லை. எவ்வாறு அவர்கள் சிறுவர் பலியாளுக்கு | உள்ளூரில் சேவை வழங்கக் கூடிய நபர்களை இனங்காணல்.<br><br>மனநோய் உளவியல் துறை, கொழும்பு மற்றும் குழந்தைநல மருத்துவர் கல்லூரி இலங்கை உடன் | இலங்கை குழந்தைநல மருத்துவர்கள் கல்லூரி.<br><br>உளவியற் துறை கொழும்பு பல்கலைக் கழகம். | இனங் காணப்பட்ட பயிற்றுவிப்பு குழுக்களின் எண்ணிக்கை<br><br>பயிற்சியின் தரம் பாடவிதான அபிவிருத்தி<br><br>தயாரிக் கப்பட்ட பயிற்சித் திரவியத்தின் தரம் | 3 வருட-ங்கள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | சேவைகள் அணுகத் தக்கவையாக இருக்க வேண்டி இருப்பதால் மாகாண மாவட்ட பிரதேச மட்டங்களில் சேவை வழங்குனர்களை இனங் கண்டு பயிற்றுவித்தல்.<br><br>NCPA ஊழியர்கள் உட்பட, சிறுவர் பராமரிப்பு மற்றும் நன்னடத்தை அலுவலர்கள், சமூக சேவைகள் அலுவலர்கள், உள்ளூர் மருத்துவ ஊழியர்கள், அருகிலுள்ள வைத்தியசாலை குழந்தைநல மருத்துவர்கள், வைத்திய அதிகாரி உள சுகாதாரம், மற்றும் சமூக சமுதாய நிறுவனங்கள், தொண்டர் களுடனான சமய நிறுவனங்கள் ஆகியோரைப் பயிற்றுவித்தல். | உதவலாம் என்பது தொடர்பில் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர்க் கு போதிய உதவி இல்லை. | பயிற்சிக் குழுக்களை அமைத்தல்.<br><br>பயிற்சி மற்றும் பயிற்சித் திரவியங்கள் தயாரித்தலை பொறுப்பேற்றல்.<br><br>முன்னேற்றக் கண்காணிப்பு வழங்கப்பட்ட சேவைகளின் தரத்தை மதிப்பிடல் ஆற்றலெல்லை | | நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் எண்ணிக்கை | |
| 07 | சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள், குறிப்பாக வயதுவந்தவர் பாலின சமத்துவ முக்கியத்துவம் பற்றி ஆரம்ப வருடங்களில் இருந்து அறிந்து விளங்கி இருத்தல் மற்றும் வீட்டில் தொடங்கி சமூகத்தில் சகல மட்டங்களிலும் வன்செயல் மற்றும் பாலினம் சார்ந்த பாரபட்சம் பூச்சிய சகிப்புத் தன்மையைப் பெற வேண்டும். இது சகல கற்றல் நிறுவனங்களில் சிறுவர் சிறுமியர் இருபாலாரதும் துஷ் பிரயோகம் இல்லாது ஒழிக்கப் படுவதுடன் சேர்க்கப் படவேண்டும். | பாடசாலைகளில் பாட விதானம், பாடப் புத்தகம்,மற்றும் கற்றல் திரவியங்களில் பாலினத் தணிக்கை நடாத்தல்<br><br>அவ்வாறான ஒரு கோடல் இருப்பின் ஆரம்ப எச்சரிக்கை முறைமைகளை அறிமுகப் படுத்தல் பாரபட்சம் நிகழின் கடுங் கண்காணிப்பு முறைமையை அமைத்தல்.<br><br>பாடசாலைகளில் பாதுகாப்புக் குழுக்களின் பாலினக் கோடலை இல்லாது ஒழிக்கும் அறிமுகத்தை ஊக்குவித்தல்.<br><br>பெற்றோர் ஆசிரியர்கள் சங்கக் கூட்டங்களில் சிறுவர் துஷ் பிரயோகம் மற்றும் பாலினக் கோடலை இல்லாது ஒழிப்பதன் முக்கியத்தை ஊக்குவித்தல் | ஆண்கள் பாடசாலைகள் மற்றும் கலவன் பாடசாலைகள் அத்துடன் பல்கலைக் கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், இளைஞர் களுக்கான இராணுவ ஸ்தாபனங்களில் பாலினப்பட்ட "பகிடி வதை"<br><br>பாலியல் துஷ் பிரயோகம் இடம்பெறக் கூடிய உண்டுறையும் பாடசாலைகள் மற்றும் உள்ளாற்ற உள்ள இடங்கள்.<br><br>அரச மற்றும் தனியார் நடாத்தும் சிறுவர் பராமரிப்பு நிறுவனங்கள், அவை பொருத்தமான மாகாண அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டு படாது இருக்கலாம். அரச சார்பற்ற நிறுவனங்களால் நடாத்தப்படும் பதிவு செய்யப்பட்ட பதிவு செய்யப்படாதன . | அவ்வாறான சகல ஸ்தாபனங் களிலும் சிறுவர் பாதுகாப்புக் குழக்களை ஏற்படுததுதல். சிறுவர்கள் சம்பந்தப்படுத் தப்பட வேண்டும், ஆனால் சமூகத்தில் பொறுப்புள்ள வயதுவந்தவர், உள்ளூர்த் தலைவர்களும் கூட<br><br>பாலின சமத்துவம் சமத்துவத்தின் முக்கியத்துவம் தொடர்பில் கல்விசார் திரவியங்களை சிறுவர்களுக்கு வழங்குதல்.<br><br>அணுகத் தக்கதும் இரகசியமானதுமான முறைப்பாட்டுப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தல். சுகல சந்தர்ப் பங்களிலும் பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப் படுவதனை உறுதிப்படுத்தல். பிரச்சினைகளை பயிற்சிக்குப் பின்னரான நடவடிக் கைகளில் எழுப்பதல் | கல்வி அமைச்சு<br><br>தேசிய கல்வி நிறுவகம்<br><br>NCPA<br><br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு | ஏற்படுத்தப் பட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்களின் எண்ணிக்கை, மற்றும் எவை இயங்கு நிலையில் உள்ளன.<br><br>இணைநிலை கற்பித்தல் நடாத்தல், பயிற்றப்பட்ட இணைநிலைக் கற்பிற்போரின் எண்ணிக்கை.<br><br>தயாரிக் கப்பட்டு விநியோகிகப் பட்ட தகவல்களின் தரம்.<br><br>பயிற்சிக்கு பின்னரான நடவடிக்கை களின் எண்ணிக்கை, அங்கு கலந்துரை யாடப்பட்ட பிரச்சினைகள் பதில் வினைகள்.<br><br>முறைப்பாட்டுப் பொறி முறையின் பலன் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கை | 3 வருட-ங்கள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | வயது குறைந்த ஆண் சிறுவர்கள் மதகுமாராக பயிற்றப்படும் சமய நிறுவனங்கள் | ஆசிரியர் பயிற்சிகளில் சிறுவர் பாதுகாப்பினை அறிமுகம் செய்தல் | | | |
| 08 | உயர்ந்துவரும் பாலினம் சார்ந்த வன்செயல் மற்றும் நெருங்கிய துணைவர் வன்செயலில் பொருள் துஷ் பிரயோகம் காரணி ஆதலைத் தடுத்தல். தடுப்பு, இளமைப் பராயத்தில் வலியுறுத்தல் உடன் குழந்தைப் பராயத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். | இணை நிலையினர் கல்வி நிகழ்ச்சிகள் ஊடாக வாழ்க்கைத் திறன்கள் கல்வி வழங்கல். | பெரும்பான்மை ஆண்கள் மது போதையிலேயே பெண்கள் மீது வன்செயல் புரிகின்றனர் என தரவுகள் வெளிப்படுத்துகின்றன. சிலர் போதை வஸ்துகளை பயன்படுத்தும் சாத்தியம் உள்ளது.<br><br>மது பாவனை, சட்ட விரோதமாக தயாரிக்கப் பட்டவை உட்பட வறிய வீடுகள் குடும்பங்களில் பயன்படுத்தப் படுகின்றன. பாடசாலைகளில் இளமைப்பருவ மற்றும் இளைஞர் குழுக்களுக்கான கல்வி நிகழ்ச்சிகளின் முக்கியத்திற்கு போதிய கவனம் செலுத்தப் படாமை.<br><br>புகையிலை கட்டுப் படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் ஊடகம் மது துஷ் பிரயோகத்தை சித்தரிக்கும் போக்கு. | சகல பாடசாலைகளிலும் வாழ்க்கைத் திறன்கள் கல்வி, குறிப்பாக இரண்டாம் நிலைப் பாடசாலைகள். தனியார் அத்துடன் அரச பாடசாலைகள் உள்ளடக்கப் படவேண்டும். வயதுவந்த மற்றும் இணைநிலையினர் கல்வி மீதான குவியத்துடன்.<br><br>மது மற்றும் வன்செயல் இடையேயான பிணைப்பை கோடிட்டுக் காட்ட ஊடக முனைப்புகளை மேற்கொள்ளல் குறிப்பாக பாலினம் சார்ந்த வன்செயல் மற்றும் நெருங்கிய துணைவர் வன்செயல் | மனநோயியற் துறை மருத்துவ பீடம் கொழும்பு<br><br>கல்வி அமைச்சு<br><br>அரச சார்பற்ற நிறுவனங்கள்ADDIC மெல் மெதுர<br><br>இலங்கை ஆபத்தான மருந்துகள் சபை<br><br>சுகாதார கல்விச் செயலகம் சுகாதார அமைச்சு | பாடசாலைகளில் இணை நிலைக் கற்பிற்போர் நிகழ்ச்சி, பயிற்றப்பட்ட இணை நிலைக் கற்பிற்போர் எண்ணிக்கை, உள்ளடக்கப் பட்ட பாடசாலைகள் எண்ணிக்கை, பங்கேற்கும் இளமைபரயத்தவர்களின் எண்ணிக்கை | 2 வருடங்கள் |
| 09 | குழந்தைகளைப் பாதுகாக்கும் ஊடகம் ஒன்றை ஏற்படுத்தல் | அச்சு ஊடகத்திற்கு மேலதிகமாக குறிப்பாக தொலை காட்சி மற்றும் வானொலி குழந்தைப் பாதுகாப்பை மேம்படுத்தல், | தொலைக் காட்சி குறிப்பாக தொலைக்காட்சி நாடகங்கள் அவை பெண் பிள்ளைகள், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்செயலைச் சித்தரிக்கின்றன.<br><br>தடுப்பின் முக்கியத்துவம் தொடர்பில் அதிக தகவல்களைக் கொண்டிருப் பதில்லை.<br><br>ஊடகங்கள் சில | பரிந்து பேசுதல், தகவல் பரிமாற்றம், குறிப்பாக ஊடக நிறுவனங்கள், முன்னணி ஊடக பிரபலங்கள், விளம்பர நிறுவனங்கள் மற்றும் தொலைக் காட்சி நாடக கதாசிரியர்கள். | சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு<br><br>ஊடக அமைச்சு<br><br>தகவல் திணைக்களம்<br><br>தனியார்த் துறை<br><br>ஊடக நிறுவனங்கள் | தொலைக் காட்சி நாடக கதை எழுத்தாளர்களுடனான கூட்டங்களின் எண்ணிக்கை.<br><br>ஊடக நிறுவனங்களுடனான கலந்துரையாடல்களின் எண்ணிக்கை.<br><br>பாலின ஓர்படிவார்பிலான மாற்றத்தைத் தீர்மானிக்க கண்காணிப்பு முறைமையை ஏற்படுத்தல் மற்றும் சிறுவர் பாதுகாப்பு செய்திகளை வழங்குதல் | 2 - 3 வருடங்கள் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | சமயங்களில் அவதூறு ஏற்படும் வகையில் பாலியல் துஷ் பிரயோக பலியாட்களின் அடையாள-த்தை வெளிப்படுத்து கின்றன.<br><br>தொலைக் காட்சி நாடகங்களில் பாலினக் கோடலான ஒரே தன்மை யானவைகள் மிதமிஞ்சிப் பயன் படுத்தப்படல். | | | | |

## பணிக்குழுவின் பின்வரும் உறுப்பினர்களுடன் இலங்கை கேயார் இன்டர்நாஷனலின் ஓர் கூட்டுழைப்பு முனைப்பு:

| | | |
|---|---|---|
| கலா. ஹிரந்தி விஜேமானே | - | பணிக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் |
| கலா. ஹேமலால் ஜயவர்த்தன | - | ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் |
| செல்வி நிடா மஷ்டாக் | - | ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் |
| செல்வி மேனகா கல்யாணரட்ன | - | சேவ் த சில்ரன் |
| செல்வி சஜீவ சமரநாயக்க | - | ஆலோசகர் |
| பேரா. அஸ்வினி பிரணாந்து | - | குழந்தைநல மருத்துவர்களின் கல்லூரி |
| செல்வி ஆர். எம். கே. டீ சில்வா | - | தேசிய கல்வி நிறுவனம் |
| செல்வி மனிஷா விஜேசிங்க | - | நீதி அமைச்சு |
| செல்வி டினெலி ரணராஜா | - | நீதி அமைச்சு |
| திரு. சக்தி ஜகோடாராட்ச்சி | - | நீதி அமைச்சு |